உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௪ { வேகுதானிய, மாசி } மலர் ௰௧

க.	தமிழுக்கு ஆக்கமாகும் பணிகள் ஔவை. திரு. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்	401
உ.	திருப்புறம்பயத்துக் கல்வெட்டு திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்	413
௩.	முச்சங்ககாலம் வித்துவான். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் P.O.L.	421
௪.	வள்ளல் மலையமான் திருமுடிக் காரி திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்	430
ரு.	தமிழ்ச்செய்திகள்	439
௬.	நன்கொடைகள் பொழிற்றொண்டர்	440

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை, தஞ்சை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௪	வெகுதானிய, மாசி	மலர் ௰௧

உ

தமிழுக்கு ஆக்கமாகும் பணிகள்

ஔவை சு. துரைசாமிப் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்கலாசாலை, போளூர்.

இதுபோது நம் தமிழ் நாட்டில் புத்துணர்ச்சி யொன்று பிறந்து, தமிழர் அனைவரையும் தமிழ்பற்றிய நினைவுகூரும் படிச் செய்து வருகிறது. அரசியல், சமூகம், வாணிபம், சமயம் என்ற பலதுறையிலும் நிகழும் பொதுக்கூட்டங்கள் நம் தமிழின் வளர்ச்சிபற்றிய செயன் முறைகளை நாடி நிற்கின்றன. ஒற்றைமாட்டுவண்டி நிலையம் முதல் வானவிமான நிலையம் ஈறாக எல்லா நிலையங்களிலும் தமிழ்பற்றிய உணர்ச்சிகள் தோன்றிமிளிர்கின்றன. கற்றவர், கல்லாதவர், சிறுவர், முதியர், செல்வர், வறியர், ஆடவர், பெண்டிர் எனப் பலதிறத்து மக்களும் தமிழை வளம்படுத்தற்குரிய சொற்களையே பேசுகின்றனர். எனவே, இக்காலம் தமிழ்நாட்டிற்கே ஒருதனித்த நற்காலம் என்று கூறல்வேண்டும். தமிழருள் பார்ப்பனரும், ஏனையரும், கிறித்தவரும், முகமதியரும், சைனரும் என்ற பலரும் தமிழ் வளர்ச்சியின்கண் தம் கருத்தைச் செலுத்து

கின்றனர். நாட்டுப்பற்றுடைய் நற்றமிழருட் பெரும் பான்மையர் நம் தமிழின் நன்மையே நினைந்து நினைந்து வேண்டுவனசெய்ய முனைந்து நிற்கின்றனர் என்றல் மிகையா காது.

தமிழின் வளர்ச்சி நாடுவோர், தம் நாட்டத்தை முதற் கண் கல்வித் துறையில் செலுத்தவேண்டியிருக்கின்றனர். நமது நாட்டுத் தொடக்கப் பாடசாலை முதல் உயர் நிலைக் கல்லூரி வரையிலும் உள்ள கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கப் பெறுகின்றது. ஆனால், ஒவ்வோரு தமிழ் மகனும் தமிழ் மகளும் கட்டாயம் தன் தாய் மோழியாகிய தமிழைக்கற்கவேண்டும் என்ற கட்டாய விதி கிடை யாது. கல்வித் துறையில் கற்பிக்கப்பெறும் பாடங்கள் யாவும் பொது வகையில் மொழிப்பாடம், மொழியல்லாத பாடம் (Language and non-language subjects) என இருவகையாகப் பகுக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றுள் மொழிப்பாடம், முதன்மொழி, இரண்டாம் மொழி என இருவகையதாகும். முதன்மொழி அரசியல்மொழி. அது தானும் இதுபோது ஆங்கிலமாகலின் அம்மொழி ஆங்கிலமாயிற்று. இதனை எல்லா மாணவரும் கட்டாயம் பயிலவேண்டும் என்ற கட்டாய விதியுண்டு. இரண்டாமொழிப் பயிற்சி வேண்டா என விலக்குதல் ஒரோவழி உண்டு; எனினும், முதன் மொழிப் பயிற்சிக்கு மட்டில் அவ்விலக்கு அறவே கிடையாது.

இரண்டாவது மொழிப்பகுதியில் தமிழ், சமஸ்கிருதம், இந்துஸ்தானி முதலாகப் பலமொழிகள் தொகுக்கப்பெற்றி ருக்கின்றன. இவற்றுள் தாய்மொழியும், அந்நியமொழியும் என இருவகை மொழிகளும் இருப்பினும், தாய்மொழியை ஒவ்வொரு மாணவனும் கற்றல் வேண்டுமென்ற விதிகிடை யாது என்பது முன்பே கூறப்பட்டது; தமிழ் நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சிறுவன் ஒருவன் தன் தாய்மொழியைக் கட்டாயம் பயிலவேண்டும் என்ற நியதி கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் இல்லாமற் போனதன் பயனாய், நம் நாட்டு மக்களுட் பலரது உயிருணர்வு, தாய் மொழிப் பயிற்சியை நாடாது, அதனைக் கட்டாயமாக்குதற் கும் தூண்டுதல் செய்யாது இறந்துபடுவதாயிற்று. ஆனதால், நம் தமிழகம், தாய்மொழியைக் கட்டாயமாக்குதற்கு விருப்ப மில்லாத விலங்கினத்தால் நிரம்புவதாயிற்று. நம்நாட்டில் தமிழ்ப்பயிற்சி, கற்றவர் என்று கணக்கிடத்தக்க மக்கட் கூட்

டத்தும் போதிய அளவு இலதாயிற்று. அரசியலின் பொறுப்புடைய பதவியேற்கும் பெரியார் ஒருவர், தமது பெயரைத் தம் தாய்மொழியில் பிழையற எழுதும்வன்மை யில்லாப் பேதையராய் இருப்பாராயினர். அஃது அவர் பெருமையைக் கெடுக்கும் சிறுமையிற் சிறுமையென்பதனை அவரேயன்றிப் பிறரும் உணராராயினர். நாட்டின் விடுதலையிற் பங்குகொள்ளும் ஒவ்வொருவரும் தம் தாய்மொழியில் நல்ல அறிவுள்ளவராதல் வேண்டும். தமிழ்நாட்டில் ஒவ்வொருவரும் கட்டாயம் தமிழ்கற்பிக்கப்பெற வேண்டும் என்பது விதியாகவேண்டும். அஃதில்லாமல்பெறும் நாட்டுவிடுதலை, வாயில்லாதவன்பெறும் அமைச்சுத்தொழில் போலப்பயன் இல்லாமல் போகும்.

ஆதலால், தமிழர் நாகரிகம், கலை, மொழி முதலியவற்றைப் பாதுகாக்கும் குறிப்புடன் உழைக்கும் தமிழ்த் தலைவர்கள், நம் தமிழ்நாட்டுக் கல்வித்துறையில், நம் தமிழ் மொழி கட்டாயமொழிப்பாடமாக்குதல் வேண்டும் என்றும், அதற்குரிய முயற்சிகளை உடனே செய்யவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தமிழ் கட்டாயபாடமாகும் வகையில், சிலர் ஒருவகைத் தடை நிகழ்த்துகின்றனர். ஏனைப்பாடங்கள் யாவும் தமிழிலேயே கற்பிக்கப்படுவதால், தமிழ்ப்பயிற்சி, தனித்தமுறையில், கட்டாயமாக வேண்டுவதில்லை என்பது அவரது தடை. தமிழ் கட்டாயமாகியவழி, வடமொழி என்னும் ஆரியமொழி இடம் பெறாது கற்பார் தொகைகுன்றிக் கெடும் என்பது மற்றொரு தடை.

இனி, முதலாவது தடையினை யாராய்வாம்: ஏனைப் பாடங்கள் யாவும் ஆங்கிலத்தின் வழியாகக் கற்பிக்கப் பெற்ற போதும், ஆங்கிலமொழிப் பயிற்சி, தனியே, கட்டாய முறையில் செய்துவந்த செய்தியை இவர்கள் மறந்து பேசுகின்றனர். ஏனைப் பாடங்களை ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்பித்தாலும், அதன் மொழிப் பயிற்சி எளிதில் எய்தாது என்பது கொண்டு, மொழிப்பயிற்சி, தனியே, கட்டாயமாக்கப்பெற்றது. இதனால், ஏனைப் பாடங்களைக் கற்பிப்பார் நோக்கம் மொழிப்பயிற்சி நோக்காது, பொருளுணர்ச்சியே நோக்கிநின்றது என்பது பெறப் படுகிறது. இப்போது ஏனைப் பாடங்களைத் தமிழ் வாயிலாகக் கற்பிக்கத் தொடங்கின் அந்நோக்கம் மாறிவிடும் என்பதற்கு யாதோர் ஏதுவும் இல்லை. எக்காலத்தும், ஏனைப் பாடங்களைக் கற்பிப்பார் நோக்கமும், கற்பார் நோக்கமும்

பொருளுணர்ச்சியையே நோக்குவதன்றி மொழிப்பயிற்சியை அத்துணைச் சிறப்பாக நோக்கா என்பது விளங்குகின்றது.

மேலும், ஏனைப்பாடங்களைக் கற்பிப்பதற்கு வாயிலாகும் மொழி அப்பாடப் பொருள்களையுணர்ந்து கொள்வதற்கே கருவியாகும். தனித்த முறையிற் பயிலப்பெறும் மொழி, மாணவன் மனத்தெழும் கருத்துக்களைப் பிறர்க்குப் பிழையற உணர்த்துவதற்குக் கருவியாகும். உணர்தற்குக் கருவியாகும் மொழி வழுவுடையதாயிருப்பினும்; உணர்த்துதற்குக் கருவி யாகும் மொழி வழுவுடையதாயிருத்தல் கூடாது என்பது அறிவு வழக்கத்துக்குரிய உண்மை நெறியாகும். "எண் பொரு ளவாகச் செலச் சொல்லித் தான் பிறர் வாய், நுண்பொருள் காண்பதறிவு" (குறள். 424) என்ற திருக்குறளை, ஆசிரியர் திருவள்ளுவர். "சொல்லி" எனச் சொல் மேல் வைத்தும், "காண்பது" எனப்பொருள் மேல் வைத்தும் கூறிய திறத்தை விளக்கவந்த ஆசிரியர். பரிமேலழகர், "சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுக என்பார் சொல் மேல் வைத்தும், கேட்பன வழுவினும், இனிது விளங்காவாயினும், பயனைக் கொண்டு ஒழிக என்பார் பொருள் மேல் வைத்தும் கூறினர்" என்று, மேலே காட்டிய உண்மை நெறியினை வற்புறுத்தி யிருக்கின்றார். ஆகவே உணர்தற்குக் கருவியாகியவழி, தமிழ், உணர்த்தற்கும் சிறிய கருவியாய்விடும் என்று கூறிவிடுவது நேர்மையாகாது.

அன்றியும், பொருள் ஒன்றின் இருப்பினைச் செவ்வை யாகக் காணமாட்டாத ஒருவன், கண்ணாடியொன்றின் துணை கொண்டறிவதுபோல, ஆங்கிலமொழிவாயிலாக உணரநின்ற மையின், பொருளுண்மையினைச் செவ்வையாக உணரமாட் டாது நின்ற தமிழ்மாணவன், தமிழைக் கண்ணாடித் துணை போலக் கையாளுகின்றான். உணர்தற்குத் துணையாகிய கண் ணாடி. அவன் மனக் கருத்தை யுணர்த்தற்குத் துணையாகாத வாறுபோல, தமிழும் துணையாகாது போகுமாதலால், துணையாகுமாறு, அதனை அவன் கட்டாயமாகத் தனியே பயிலவேண்டிது இன்றியமையாதாகின்றது. ஆகவே, எவ் வகையால் நோக்கினும், தமிழ் நாட்டுத் தமிழ் மாணவனுக்குத் தமிழ் கட்டாய பாடமாதல் மிகவும் வேண்டுவதொன்றே என்பது பெறப் படுவதாம்.

இனி, தமிழ் கட்டாயமாகிய வழி வடமொழி இடம் பெறுது கெடும் என்ற தடை அறிவு நெறிக்குப் பொருந்தாத்

தடையாகும். தமிழ் கட்டாயமாவதால் வடமொழி இடம் பெறுது போதற்கு ஏதுவென்னை? தமிழோ, உலகவழக்கில், ஒரு மக்கட் குழுவின் தாய் மொழியாவது. ஆரியமோ வழக் கிறந்தது; எம்மக்களுக்கும் தாய்மொழியாக இருப்பதன்று. தாய்மொழியின் இடத்திற்முன், அச்சமஸ்கிருதம் இருத்தல் வேண்டும் என்பதற்கு ஒருவகை இயைபும் கிடையாது. அதனைக் கற்கவேண்டும் என்று விரும்புவோர் உளராயின், அதனை விருப்பப் பாடப் பகுதிகளுள் ஒன்ருக்கிவிடின், அது கெடுமாறில்லை. எல்லா மக்கட்கும் உயிர்போல் வேண்டப் படும் தாய்மொழியை, அத்தகைய இயைபில்லாத பிறிதொரு மொழியின்பொருட்டுக் கட்டாயமாக்காது விடுவது மருந் துண்டு உயிர்வாழ நினைந்த ஒருவன் நஞ்சை உண்பதுபோ லாகும். ஆகவே, தமிழ் மக்கள் அனைவரும் ஒருங்குகூடித் தம் தாய்மொழியாகிய தமிழ்மொழி நம் நாட்டுக் கலாசாலை களிலும் கல்லூரிகளிலும் கட்டாயமொழிப் பாடம் (Compulsory Language subject) ஆக்கமுயலவேண்டிய கடமையுடையவ ராகின்றனர்.

ஒருசிலர், ஆங்கிலம் முதலிய மொழிகள் கட்டாய பாட மாக விதிக்கப்பெற்ற காலத்தில் தாய்மொழியும் கட்டாய மாதல்வேண்டும் என்று கிளர்ச்சி செய்யாது, இப்போது செய் வது முறையன்று என ஒரு வாதம் செய்கின்றனர். இவர் வரலாற்று நிலையறியாத மடவோர் ஆகலின், இவரது பேத மைக்கு நாம் இரங்குவதல்லது வேறு செய்வதற்கில்லை. அந் நிய ஆட்சிக்கும், அந்நிய நடையுடைகட்கும், அந்நியமொழிப் பயிற்சிக்கும் அடிமைப்பட்டுக் கிடந்த நம்நாடு, இன்று ஏன் ஆட்சி விடுதலைக்கும், நம்நாட்டு நடையுடைகட்கும் பிறவற் றிற்கும் கிளர்ச்சி செய்யவேண்டும்? வடநாட்டார் போன்ற உடையுடுத்தற்கும், வடநாட்டாரது மொழிப் பயிற்சிக்கும் பெருமுயற்சி செய்யும் நம் மக்கள், மேனாட்டார் நடையுடை யும், மொழிப்பயிற்சியும் வந்தகாலத்தில் அவற்றிற்கு அடிமை யானது ஏன்? இவற்றையெல்லாம் அப்போதே செய்திருக்கலா மல்லவா?

வாலாற்று நெறியை நோக்காது, ஒருகாலத்துத் தோன் றும் நல்லுணர்ச்சி அதற்கு முன்னே பின்னே தோன்ற வேண்டுமென்று வாதம் செய்து தோன்றிய நல்லுணர்ச்சியைச் சிதைப்பது சிறப்புமன்று சீருமன்று.

இனி, ஏனைப்பாடங்களை (Non-language subjects)க் கற்பித்தற்காகத் தமிழில் பல புத்தகங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. இவற்றுள் சில நீங்கலாகப் பெரும்பாலன மிக இழிந்த நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றை எழுதியவர்கள், தமது தமிழறிவின்மையைத் தமிழுலகிற்குக் காட்டுவதற்கு இவைகளைக் கருவியாகக் கொண்டனரோ என்று எண்ணத்தக்க நிலையில் இவைகள் இருக்கின்றன. ஒரு மொழியில் ஒரு நூல் எழுதப்புகும் ஒருவர், முதற்கண் அம் மொழியில் தனக்குப் போதிய அறிவுபெற்ற பின்னரே செய்தல்வேண்டும். இதுபோது எழுதப்பெற்று வருவன பெரும்பாலும் தமிழறிவே நிரம்பாதவர்களால் மிக இழிதக்க நிலையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

முதலாவதாக இப்புத்தகங்கள் பெரும்பாலும் நூற்றுக்குத் தொண்ணூறு வடசொற்கள் நிரம்பி, தமிழ்மணமும், தமிழ்நடையும், தமிழோசையும் இன்றி தமிழ்ப்புத்தகம் என்று ஒருவன் கூறுவதற்கு மிகவும் நாணப்படத்தக்க நிலையில் இருக்கின்றன. கலந்து நிற்கும் கலைச்சொற்கள் பலவும் கத்தலோசையும் கனைப்போசையும் உடைய வடசொற்களாகவே இருக்கின்றன. இவற்றின் அவகேடான நிலையினை, சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தலைமையாசிரியர். திருவாளர். எம். சண்முகசுந்தர முதலியார் எம். ஏ. எல். டி. அவர்கள் விடுத்துள்ள சுற்றறிக்கையில் விளங்கக்காட்டியிருக்கின்றனர். அவாந்தரகணனம் (Interpolation), விலோமதராதரம் (Inverse Ratio), அநிஷ்கர்ஷம் (Approximation), ஸ்நிக்தக்வம் (Adhesion), ஆரோஹகம் (Rider), உன்மஜ்ஜனம் (Buoyancy); பின்னஸ்படிகீகரணம் (Crystallization fractional) நிவர்த்தி தோஷ அவலம்பம் (Compensated Pendulam), கர்ணம் (Hypotenuse), குலஸ்திரீ புருஷ பாலவிருத்த ஆயவ்யய பரிமாணபத்ரிகை (Census Report) என்பனவும், ஆவர்த்த தசாம்சம் (Recurring Decimal), ஐக்கிய சாம்யம் (Identity), நேர்விகித சாம்யம் (Direct proportion), பாஜ்யத்துவம் (Divisibility), குணங்கம் (Factor), தனராசி, ரிணராசி யெண்கள் (Positive and negative numbers), ரீதிமானம் (Ratio) என்பனவும் பிறவுமாக வரும் கலைச்சொற்கள் செறிந்து, தமிழ் நூல்களின் நடையழகைக் கெடுத்து, மாணவர்க்குப் பெருமயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. ஆங்கிலமொழி வாயிலாக எளிதில் பொருள் நலம் உணரமாட்டாது தவித்த தமிழ்

மாணவர்களுக்கு, அம்மாட்டாமை மிகுதற்பொருட்டு தமிழும், ஆங்கிலமுமல்லாத ஆரியச் சொற்கள் நிறைந்து புத்தக வடிவாய்த் தமிழ்ப்போர்வை போர்த்து வந்துள்ள அறிவுக் கொலை நூல்களே இவை யென்னின், அது மிகையாகாது. இன்னோரன்ன நான்முறைகளை வகுப்போர் முழுத்த அறிவிலிகள் ஆவரேயன்றி வேறு யாவராவர்? இவற்றின் இயல்புகளைக்கண்ட தமிழறிஞர் பலர் ஒருங்குகூடி, கலைச் சொல்லாக்க முயற்சிசெய்து ஒரு சொன்னிரலை வகுத்திருக்கின்றனர். நூலெழுதுவோர், முன்னே காட்டியதும் பின்னே குறித்த சொன்னிரலுமாகிய இவ்விருவகை நிரலில் எந்த நிரலை எடுத்தாளவேண்டும் என்று திரு. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் எழுப்பிய கடாவிற்கு, அரசியலார், அவரவர் விருப்பப்படி எழுதலாம் என்று விடைகூறியதாக, அவர் சென்னையில் நடந்த ஒரு கூட்டத்திற் கூறியிருக்கிறார். இவ்வகையில் அரசியலார் விடுத்துள்ள விடை ஏனைப்பாடங்களைத் தமிழிலேயே கற்பிக்கவேண்டும் என்ற கொள்கை நடைமுறையில் வெற்றி பெறாது கெடுதற்குத் துணைபுரிவதாக இருக்கிறது. ஆகவே தமிழ்த் தலைவர்கள் பிறசொற்களின் அளவிறந்த கலப்பால் தமிழின் தனிநலம் கெடாதவகையினைத் தேட முன் வருதல்வேண்டும்.

தமிழின் தனித்த சிறப்புக் கெடத்தக்கமுறையில் இந்நூல்களை இவர்கள் எழுதுவதற்குரிய காரணங்கள் சில கூறப்படுகின்றன. அவற்றுள் இந்நூலாசிரியருட் பெரும்பாலார் தமிழில் போதிய அறிவில்லாதவர் என்பது ஒன்று. தமிழில் போதிய அறிவில்லாதவர்களாயின், இவர்கள் தாம் எழுதும் நூல்களைத் தமிழறிந்தவரிடத்தில் காட்டித் தமிழ் மொழியின் அமைதிக்கேற்பத் திருத்திக்கொள்ளவேண்டும். தமிழில் இல்லாதபொருளாயின், அதற்குரிய பெயரைத் தமிழ் இலக்கண அமைதிக்கேற்ப ஆக்கிக்கொள்ளுவதே செய்யற்பாலதாகும். அதற்கெனத் தமிழ் இலக்கணத்தில் இடம் விதிக்கப்பெறாமல் இல்லை. "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, எழுத்தொடுபுணர்ந்த சொல்லாகும்மே" என்பது விதி. ஏனைமொழிச் சொற்களைத் தம் மொழியில் ஆக்கிக் கொள்ளும்போது அச்சொற்களைத் தம் மொழியின் எழுத்து, ஓசை அமைதிகட்கேற்ப மாற்றிக்கொள்வதே உலகமக்களின் இயல்பு. அச்சொற்களுக் கேற்பத் தம் மொழிவரம்பைச் சிதைத்துக்கொள்வது மானமுடைய மக்கட் செயலன்று. த்வரிதம், ம்ருகம், ரிணராசி, லம்பம் முதலிய வடசொற்களைத்

தமிழில், மாற்றுது எழுதுவது தமிழிலக்கண வரம்புகடந்த தாகும். அவ்வாறு எழுதும் முறை தமிழனுடைய மானத்துக்குக் கேடாகும். தமிழில் மெய்யெழுத்து ஒரு பதத்தின் முதலில் வரலாகாது. ர, ல முதலியனவும் மொழிக்கு முதலில் வாரா. இவ்விதியைக்கடவாமலே சென்ற நூற்றாண்டுவரையில் இருந்த தமிழ்ப்பெருமக்கள் செய்துவந்திருக்கின்றனர். இப்போது, இவ்வரம்பு அறவே புறக்கணிக்கப் பெறுகிறது. ஆங்கிலமக்களோ, வடமொழியாளரோ, தமது மொழியில் ஒரு தமிழ்ப் பொருளையுணர்த்த நேருமாயின், அதனை மொழி பெயர்த்தோ, தம் மொழியோசைக் கேற்பத் திருத்தியோ கூறுவது மரபேதவிர, தம் மொழியில் இல்லாத ஓசைகுறித்து, தம்மொழியைச் சிதைத்துக்கொள்வது கிடையாது. அம் மக்களைப்பார்த்து, அவர் தம் நடையுடை ஒழுக்கம் முதலிய வற்றை மேற்கொள்ள விரும்பும் இக்காலத் தமிழர்கள், அவர் தம் மொழிபற்றிய மானத்தை மேற்கொள்ளாமை இழிசெய லாகும். இவையாவும் நூல்வழக்குகளில் முதலில் குறிக் கொண்டு காக்கப்படவேண்டும்.

தமிழில் புத்தகம் எழுதுவோரும், பத்திரிகை நடத்து வோரும் பிறமொழிகளின் ஓசை தமிழில் இல்லாதவழி, சமஸ்கிருத எழுத்தோசைகளை நிரப்பித் தமது மானமின்மை யுணர்த்திவருகின்றனர். மொழிக்கு முதலில்வாராத எழுத் துக்களையும், உடனிலை மயக்கத்துக் கொவ்வாத எழுத்துக் களையும் தமிழிலக்கண வரம்பு கடந்து மொழிக்கு முதலில் வருமாறும், உடனிலையாய் மயங்குமாறும் எழுதி, தமிழ் மொழியின் கற்பு நெறியைக் கெடுத்து, தமிழரின் மான வுணர்வைச் சிதைத்துவரும் இக்கொடுமை இப்போது மிகுந்து வருகிறது. இது மிகாதபடி தொடக்கத்தேயே தடுக்க வேண்டியது தமிழர்களின் முதற் கடமையாகும். இதற்காக, அரசியலார் நிறுவியிருக்கும் புத்தகத் தேர்வுக் கழகங்களில் நாடறிந்த தமிழ்ப் புலவர்களும், தமிழ்ச் சங்கங்களும் உறுப்புப்பெற்று, இக்கொடுமை தலைகாட்டாதபடித் தடுக்க வேண்டும்.

இனி, இரண்டாவதாக ஒரு காரணம் கூறுகின்றனர். இந்திய நாட்டில் ஆரியமொழி பொதுவாக எல்லாப் பகுதி யினும் பரவி யிருக்கின்றது; கலைச் சொற்களும் இந்தியநாட் டின் எப்பகுதியினும் நிலவத் தகுந்தனவாகலின், இவை வட மொழிச் சொற்களாகவே இருத்தல்வேண்டும், என்று கூறி,

மேனாடுகளில், லத்தீன் மொழியே கலைச்சொற்களுக்கு உரிய மொழியாகக் கையாளப்படுகிறது எனத் தம் கொள்கைக்குச் சான்று காட்டுகின்றனர்.

கலைச்சொற்கள் எல்லா நாட்டிற்கும் பொதுவாயவை யென்பது உண்மை; அற்றாக, அவற்றை வடமொழியால் எழுதி, நம் நாட்டு மாணவர்களை ஏனை உலக மக்களினின்று பிரிப்பது கொடுமையன்றோ? மேனாடுகள், அவர்கள் கூற்றின் படி, லத்தீன் மொழியையே மேற்கொண்டபோது, நாம் ஏன் அம்மொழிச் சொற்களையே மேற்கொண்டு, கலைச்சொல் வகையால் உலக மக்களோடு அறிவு ஒற்றுமை எய்தக்கூடாது? வடமொழிச்சொல் மேனாட்டு மக்கள் அறியாததாகலின், எல்லா நாட்டு எல்லா மக்கட்கும் தெரியக்கூடிய அச்சொற்களையே, நம்மொழியின் எழுத்தோசைக் கேற்ப அமைத்து வழங்குவ தால் வரும்கேடு என்னை? தமிழில் உள்ளனபோக, இல்லாத கலைச்சொற்களை, பிறநாடுகளில் வழங்கிய வண்ணமேகொண்டு தமிழோசைக் கேற்ப அமைத்துக்கொள்ளுவது தானே அறி வுடைய செயலாகும்? போலோனியம் என்னும் பொருளை வட மொழியிற் கூறிக்கொள்வதா? தமிழ்ப்படுத்திக்கொள்வதா? போலந்து நாட்டுப்பெருமக்கள், தம் நாட்டின் பெருமை நிலவ, புதிதாய்க் காணப்பெற்ற பொருளொன்றிற்குப் போலோனியம் என்ற பெயரிட்டிருக்கின்றனர். போலோனியம் என்ற வழி அஃது உலகில் எப்பாலுள்ளார்க்கும் இனிது அறியக் கூடிய பொருளாயிருக்க, அதனை வடமொழியில் மொழிபெயர்த்துத் தமிழில் எழுதுவதால் உண்டாகும் ஆக்கம் என்னை? கலைச் சொற்களைப் பெருக்கு முகத்தால் மக்களது அறிவுவளர்ச்சிக்கு ஆக்கம் தேடும் வழியில் சாதி, சமயம், தேசியம் போன்ற வற்றைப் புகுத்துவது மடவோர் செயலாகும். அஃது அறிவு நெறிக்கும் பொருத்தமாக இன்மையால், இவர்கள் செயலும் பொருந்தாச் செயலென்பது வெளிப்படை. ஆகவே ஏனைப் பாடபுத்தகங்களுள் வேண்டாத வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்து தமிழின் தனிச் சிறப்பைக் கெடுக்காத படி, புத்தகத்தேர்வுக் கழகங்களில் தமிழ்ப்பெரும் புலவர் களும், தமிழ்ச்சங்கங்களும் உறுப்பினராய், வடசொற்கள் மிக விரவிய தமிழ் நூல்களை அரசியலார் ஏலாத வழியை அமைத்தல் வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளு கின்றேம்.

இனி, ஏனைப்பாடங்களைத் தமிழில் கற்பிக்கும் ஆசிரியன் மார்களின் தகுதியை நோக்குவோம். இவர்களுட் பெரும்பாலோர் தாய்மொழியாகிய தமிழில் நிரம்பிய அறிவில்லாதவராவர். இவர்கள் பேசுவதும் எழுதுவதும் பிழைமலிந்தேயிருக்கின்றன. இவர்களுள் மிகப்பலர், தம்பெயரையும் தம் ஊர்ப் பெயரையும் தமிழில் பிழையில்லாமல் எழுதக்கூடிய அறிவுதானும் இல்லாதவராவர். இவர்கள் தேர்வு (Examinations) க்காலங்களில் மணவர்களுக்கு விடுக்கும் வினாக்களை மட்டில் ஒருவர் காணலுறுவாராயின், இவரது தமிழறிவின்மைக்கு மனங்கசிந்து பெரிதும் இரங்குவர். நம்நாட்டுக் கலாசாலைகளில் இப்பிழைகளை நீக்குதற்கு வேண்டிய அளவில் தாய்மொழி இடந்தரப் படவில்லையென்பதை ஆர்தர் மேஹ்யூ, (Arthur mayhew) மைக்கேல் வெஸ்ட் (Michael west) முதலிய கல்வியாளர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இவர் தம் தமிழறிவே இந்த இழித்தக்க நிலையில் உளதாயின், இவர்களால் எழுதப்படும் தமிழ் நூல்கள் எத்துணை வழுமலிந்திருக்கும் என்பதை அறிஞர்களே உணர்ந்து கொள்ள வேண்டும். இவர் தம் நூல்களில், வகுப்புயர்ச்சிக் கேற்ப நடையுயர்ச்சியோ, பொருளாழமோ, யாதும் காணப்பெறுவது இல்லை ஆகையால், இந்த நூல்கள் யாவும், கலாசாலைகளில் பாடமாக நிறுவப்பெறுவதற்கு முன் தமிழ்ப் புலவர்களின் ஆராய்ச்சிக்கு இடனாகவேண்டும் என்ற விதி பிறத்தற்குரிய முயற்சியினைத் தமிழ்ப் பெரியார்கள் செய்தல் வேண்டும்.

தொடக்கப் பாடசாலைகளிலும், தொடக்க உயர்தரப் பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியன்மார்களிற் பெரும்பாலார், தமிழ்ப் பயிற்சியாற்போதிய அறிவு பெறுமல் இருக்கின்றனர். அவர்கள் குறைந்த கலாசாலைப் படிப்புடையவராயினும், மேற்கூறிய ஆசிரியன்மாரிடத்தில் பயின்று, வழுமலிந்த தமிழ் அறிவு உடையராய் உள்ளனர். மிகச் சிலரே தமிழறிவு நன்கு பெற்றவராய் இருக்கின்றனர். இவர்கள் தமிழறிவு குறைந்தவராய் இருத்தலின், இவர்பால் பயின்று, அப்படிப்போடு நின்று போகும் மாணவர்கள் நான்கு தமிழ்ச் சொற்கள் பிழையில்லாமல் எழுதவும் பேசவும் மாட்டாமல் இரங்கத்தக்க நிலையில் இருக்கின்றனர். இக்குறை முதற்கண் நீக்கப்படின், தொடக்கப் பாடசாலை மாணவர்கள் பலரும் செவ்விய தமிழறிவு பெற்று விளங்குவர். தொடக்கக் கல்வியும் வளமுடைய கல்வியாய் நாட்டுக்கு நன்மை விளைவிக்கும். ஆதலால் தொடக்க உயர்

நிலைப் பாடசாலைகள் (Higher Elementary Schools) எல்லா வற்றிலும் போதிய தமிழறிவுபெற்ற தமிழாசிரியர்களை நியமித்தற்கு வேண்டிய முயற்சிகளைத் தலைவர்கள் செய்ய வேண்டும்.

இவ்வாசிரியர்களைப் பயிற்றுவிக்கும் போதனமுறைப் பாடசாலைகளில் (Training schools for teachers) உள்ள ஆசிரியர்கள் அனைவரும் தமிழில் வித்துவான் பட்டம்பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். இவர்களிற் பெரும்பாலார் தமிழ் அறிவு இல்லாதிருக்கின்றமையின், தம்பால் ஆசிரியராதற்குப் பயிலும் ஏனையோரது மொழியறிவை அளந்து செம்மை செய்யக்கூடிய ஆற்றல் இல்லாதவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் பேசும் தமிழும், எழுதும் தமிழும் எண்டுக்காட்டலுறின், அவை பலரும் நகைத்து இழிப்பதற்குரிய பொருளாகி விடும் என்று அஞ்சிவிடுக்கின்றோம். இவர்களே பெரும்பாலும் தொடக்கக் கலாசாலைகளின் கண்காணிப்பாளர்களாக (Inspectors of Schools) வருகின்றனர். எனவே, இவர்களால் கண்காணிக்கப்படும் தொடக்கக்கலாசாலைகளின் கல்விநிலை எவ்வளவு சீர்கேடு அடையும் என்பதைச் சொல்லவேண்டுவதே யில்லை. தொடக்கக்கல்வி நம்நாட்டில் வளம்பெற வளராமைக்குக் கூறப்படும் காரணங்களுள், இக்கண்காணிப்பாளர்களுட் பெரும்பாலார் தமிழில் அறிவில்லாதவர்களாய் இருக்கின்றனர் என்பதும் ஒன்றாகும். ஆனால், இதனை உணர்ந்து தமிழறிவு சிறக்கவுடையவர்களை இத்தொழிலுக்கு உரியவராக்கிவிடின், நாட்டில் கல்விநலம் மேன்மையெய்தும். எழுவாய் பயனிலை யியைபு அறியாதவர்களும், பாடசாலையின் நிலையினை நன்கு அறிந்து, அதனை உள்ளபடியே தூயதமிழில் எழுதத் தெரியாதவர்களுமே பெரும்பாலும் கல்வித்துறையிற் பல்கியிருக்கின்றனர். இதுவே நாட்டில் கல்விவளர்ச்சிக்குப் பெருந்தடையாய் இருக்கிறதென்பதைத் தமிழ்த் தலைவர்கள் அறிவார்களாக. பாடசாலைக் கண்காணிப்பாளராக வருகிற ஒவ்வொருவரும் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்றதொரு கட்டாய விதியை அரசியலார் பிறப்பிக்குமாறு செய்தல் வேண்டும்.

இது காறும் கூறியவற்றால், நம் தமிழ்க்கு ஆக்கமாகும் பணிகள் இவையெனச் சுருங்கக் கூறலுறுகின்றேன்.

1. தமிழ்நாட்டுக் கலாசாலைகள் எல்லாவற்றிலும் தமிழ் கட்டாய பாடமாக இருத்தல் வேண்டும்; இதன் இடத்தில், ஆரியம், முதலிய பிறமொழிகள் இடம் பெறுதல் கூடாது.

2. ஏனை மொழிப்பாடங்களைக் கற்பித்தற்குக் கருவியாகும் புத்தகங்கள் யாவும் வேண்டாதவடசொற்கள் விரவியிருத்தல் கூடாது.

3. இப் பாடபுத்தகங்கள் வகுப்புயர்ச்சிக் கேற்ப நடையுயர்ச்சியும் பொருளாழமும் உடையவாய் இருத்தல் வேண்டும்.

4. இவற்றைக் கலாசாலைகளிற் பாடமாகத் தேர்ந்து கொள்ளும் அரசியற் கழகத்தில், நாடறிந்த தமிழ்ப்புலவர்களும், தமிழ்ச் சங்கங்களும் உறுப்புப் பெற்று, இவற்றை நன்கு ஆராய்ந்த பின்பே பாடமாக வைத்தற்குரிய தகுதிப் பாட்டினை வழங்க வேண்டும்.

5. எல்லா உயர்நிலைத் தொடக்கப் பாடசாலைகளிலும் தமிழாசிரியர்கள் நியமிக்கப் பெறுதல் வேண்டும்.

6. போதனு முறைப் பாடசாலைகளில் தொழில் செய்யும் ஆசிரியர்களும், பாடசாலைகளைக் கண்காணிப்பவர்களும் (Teachers in Teachers 'training School and Inspectors of Schools) தனித் தமிழ் வித்வான் பட்டம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

இக் கூறிய யாவும் நம் தமிழ்மொழியின் ஆக்கத்திற்குப் பெரும் பணியாவன வாகலின், தமிழ்மக்கள் இவற்றைமேற்கொண்டு, மேலும் ஆக்கமாவனவற்றையும் உடன் எண்ணி வேண்டுவனசெய்ய இன்னே முயலுமாறு வேண்டுகின்றேம்.

" ஞானமுண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே "

திருமூலர்.

உ

திருச்சிற்றம்பலம்.

சேக்கிழார் காலத்தை அறிதற்குக் கருவியாயுள்ள திருப்புறம்பயத்துக் கல்வெட்டு

திரு வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள், ஆசிரியர், திருவையாறு.

திருப்புறம்பயம் என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களில் ஒன்றாகும். இது தஞ்சை சில்லாவில் கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்து கல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கிறது. இது சைவசமய குரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற பழைமையும் பெருமையும் வாய்ந்தது.

இது பிற்காலத்துச் சோழர்களில் முதல்வனும் கி பி. 880 முதல் 907 வரையில் அரசாண்டவனுமாகிய முதல் ஆதித்தனால் எடுப்பிக்கப்பெற்ற மிகப்பழைய கற்றளியை யுடையது. இவ்வாலயத்திற்கு ஆதித்தேச்சுரம் என்ற பெயர் உண்டென்று இவ்வாலயத்திலுள்ள முதலாம் இராசேந்திரனுடைய பதினாறும் ஆண்டைய கல்வெட்டு உணர்த்துகின்றது. எனவே இவ்வாலயம் கி. பி. 907-க்கு முன்னரே கட்டப்பட்டுள்ளது என்பது வெளிப்படை.

இக்கோயிலின் திருத்தோரணத் திருவாயிலில் (முதற் கோபுரவாசல்) அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய காடவர்கோன் கழற்சிங்கரது (இரண்டாம் நரசிங்க வர்மரது) தூண்கள் இருப்பனகொண்டு, இம்மன்னர் காலத்திலேயே இவ்வாலயம் கற்றளியால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், பின்னர் முதலாம் ஆதித்தன் இதை இடித்து இதுபொழுதுள்ள பெரிய ஆலயத்தை எடுப்பித்திருத்தல் வேண்டுமென்றும் கொள்ள இடனுண்டு.

இவ்வாலயம் முதல் ஆதித்தன் காலமுதல், பராந்தகன் I, உத்தமசோழன், ஆதித்தன் கரிகாலன், (இரண்டாம் பராந்தக

சோழனது மகன்) இராசராசன் I, இராசேந்திரசோழன் I (அல்லது) கங்கை கொண்ட சோழன், இராசாதிராசன், முதற் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாங்குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றுங் குலோத்துங்கன், மூன்றும் இராசராசன் உள்ளிட்ட சோழமன்னர்களுடைய கல்வெட்டுக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் விசயநகர வேந்தனாகிய இரண்டாவது தேவராயனது கல்வெட்டு ஒன்றும் உண்டு. இவைகளுள் சேக்கிழார் காலத்தை அறிதற்குக் கருவியாயுள்ள கல்வெட்டு ஒன்றினை ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமென்று எண்ணிக் குறிப்புரையுடன் ஈண்டுத்தருகின்றேன். [இக்கல்வெட்டிலுள்ள சில தொடர்களைச் சேக்கிழார்காலம் என்று தமிழ்ப்பொழிலில் யான் எழுதியுள்ள கட்டுரையின் ஈற்றில் சேர்த்துள்ளேன்]

இடம்—இடைநாழிகையின் (அர்த்தமண்டபத்தின்) தென்புறம்.

காலம்—ஏழாம் ஆண்டு

மன்னன்—மூன்றுங்குலோத்துங்கன்.

(1) சுவஸ்திஸ்ரீ திருப்பேரம்பலம் பொன்வேய்ந்த திரி

(2) புவன சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவற்

(3) கு யாண்டு எ-வது வடகரை விக்கிரம சோழவளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து திருப்

(4) புறம்பயத்து இருக்கும் ஆலங்குடையான் அடிகள் புறம்பியனும் அயிற்

(5) காடுடையான் குற்றி திருச்சிற்றம்பல முடையானும் இவ்விருவோம் உடையார்க்கு திங்கள் அமா

(6) வாசைக்கு அமுது செய்தருள அமாவாசி ஒன்றிற்கு ஆளுடைநாச்சிக்கும் திருப்பள்ளியறை நா

(7) ச்சியார்க்கும் செந்நெல் திருவமுது.........

(8) நாநாழியும் கூத்தாடுந் தேவர்க்கும் பிராட்டியார்க்கும் ஆக திருவமுது அரிசி நாலுநாழியும் பி

(9) ள்ளையார் முத்துமுளைக் கன்றுக்கு திருவமுது அரிசி நாநாழியும் பிள்ளையார் அறம்பயந்த பிள்ளை

(10) யார்க்கும் திருவமுது அரிசி நாநாழியும் ஆக பூரித்த அரிசி............அறுநா

(11) மிக்கும் இரண்டஞ்சாக நெல் தூணி முக்காழியும் கறிவிறகு உள்ளிட்ட விஞ்சன

(12) ங்களுக்கு நெல் தூணிப்பதக்கும் ஆக நாள் + க்கு நெல் கலம்.........ஆக அமாவா

(13) சி ௰உ க்கு வேண்டும் நெல் பதின்கலன் இரு தூணிக் குறுணிக்கு கொல்லைத்திருத்தி

(14) விட்ட நிலமாவது ஒடேந்துசெல்வர் வாய்க் காலுக்கு மேற்

(15) கு திருவாதிரை அறத்து விளைநிலத்திற்குத் தென் கிழக்குக் கொல்லை சமக்கும் பழவரிசைப்படி நெல் முக்கலத் துக்கு இந்நிலம் இரண்டு

(16) மாக்காணியும் திருத்தறத்திருத்தி வரிசை இட்ட நெல்.........ஐங்குறுணியில்

(17) கொல்லை வ.........டைக்கு வேண்டும் நெல் நீக்கி நிற்ற நெல் பதினேழுகலனே.........

(18) ஆட்டு அமாவாசை ௰உக்கு புகட்டினபடி உடை

(19) யார் திருப்புறம்பியம் உடையார்க்கு சந்திராதித் தவல்......ந

(20) டவதாக நிபந்தம் கட்டிப் பந்மாகேஸ்வர ரக்ஷை. ஆக்கிம.........

(21) கட்டிவிட்டார்கள். ஆலங்குடையானும் அயிற் காடு உடையானும். நன்று.

குறிப்பு:—இக்கல்வெட்டு இதுகாறும் தென் இந்திய கல் வெட்டுத் தொகுதிகளில் வெளிவரவில்லை.

குறிப்புரை.

விக்கிரம சோழ வளநாடு

முதலாம் இராச ராச சோழன் காலத்தில் (கி. பி. 985—1014) சோழமண்டலம் இராசேந்திர சிங்கவளநாடு, இராசா ச்ரயவளநாடு, நித்தவிநோத வளநாடு, சத்திரிய சிகாமணி வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு, அருண்மொழி தேவ வளநாடு, கேரளாந்தக வளநாடு, இராசராச வளநாடு, பாண்டியகுலாசனி வளநாடு, என்னும் ஒன்பது வளநாடு களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. இவ்வளநாடுகள் இம்மன்ன னது பதினெட்டாம் இராச்சிய ஆண்டில்தான் பிரிக்கப் பட்டன.

இவை பெரும்பாலும் இரண்டிரண்டு பேராறுகளுக்கு இடையில் அமைந்திருந்தன. இவற்றின் பெயர் அனைத்தும் இம்மன்னனது இயற்பெயரும் பட்டப் பெயர்களுமேயாகும்.

இவற்றுள் இராசேந்திர சிங்கவளநாடு, வடகரை இராசேந்திர சிங்க வளநாடு என்றும் வழங்கப் பெறும். இது காவிரிக்கும், வெள்ளாற்றிற்கும் (நிவா) இடையிலுள்ள பெரு நிலப் பரப்பைத் தன்னகத்துக் கொண்டதாகும். இது அதிகை மங்கை நாடு முதல் விளத்தூர் நாடு இறுதியாக இருபத்திரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. (S. I. I. Vol II Part V. Introduction pages from 21 To 27)

இம் மன்னன் காலம் முதல், அதிராசேந்திரன் காலம் முடிய இவ் வளநாட்டிற்கு இப்பெயரே வழங்கிவந்தது. இவ்வதிராசேந்திரனுக்குப் பிறகு பட்டம் எய்திய முதற் குலோத்துங்கன் இவ் வளநாடுகளின் பெயர்களை மாற்றி விட்டுத் தன் பெயர்களை அவற்றிற்கு இட்டனன். அவ்வாறு இட்ட காலத்தில் இராசேந்திர சிங்கவள நாட்டின் மேற்குப் பகுதி உலகுய்ய வந்த சோழவளநாடு என்னும் பெயருடைய தாயிற்று. இவ்வுலகுய்ய வந்த சோழவளநாடே இம்மன்னனது மகனாகிய விக்கிரமசோழன் காலத்தில் விக்கிரம சோழவளநாடு என்னும் பெயர் எய்தலாயிற்று. இவன் காலம் முதல் இவனுக்குப் பிற்பட்ட சோழ மன்னர்கள் காலம் முடிய இதற்கு இதுவே பெயராய் இருந்தது.

இச்செய்திகளுக்குக் கல்வெட்டு ஆதாரங்கள்

I

காலம்—முதல் இராச ராச மன்னனது இருபத்தைந்தாம் ஆண்டு,

இடம்—விமானத்தின் மேற்புறம்.

(1) சுவஸ்தி ஸ்ரீ கோவி ராஜகேசரிவம்மரான

(2) ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு உ௰ரு

(3) ஆவது இராஜேந்திர சிங்கவள நாட்டு அண்

(4) டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதாந

(5) ந் திருப்புறம்பியத்து திருப்புறம்பியமுடைய மஹாதே

(6) வர்க்கு இத்தேவர் தேவதானம் பிரம்பியன் காசு ....இருக்கும் வெள்

(7) ளாளன் பொருநபாடியுடையான் அரணிதி மண் ணிய கமுடையான்

(8) ஒழியாப்பகை பசுவதி வைத்த திருநொந்தாவிளக்கு + ஒன்று. இதில் முன்பு

(9) இவன்பக்கல் காசுகொண்டு இவ்வூர் ஸ்ரீ கோயி லுடையான் மாறன்முன்

(10) னூற்றுவபட்டன் எரிக்கக்கடவ விளக்கு அரையும்

(11) இவன் மக்கள் பக்கல் காசுகொண்டு இவ்வூர் ஸ்ரீ கோயி

(12) லுடையார்கள் எரிக்கக்கடவ விளக்கு அரையும் ஆக விளக்கு விளக்கு ஒன்று—

இக்கல்வெட்டை திரு........பண்டாரத்தார் அவர்கள் குரோதன ஆண்டு தமிழ்ப்பொழில் ஆவணி இதழில் வெளி யிட்டிருக்கின்றார்கள். இதனால் முதல் இராசராச மன்னன் காலத்தில் திருப்புறம்பியம் இராசேந்திர சிங்கவளநாட்டைச் சார்ந்தது என்று தெரிகிறது.

II

அரசன்—முதற் குலோத்துங்கன்

ஆண்டு—நாற்பத்துமூன்று

இடம்—விமானத்தின் தென்புறம்

சுவஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு சமிங ஆவது உலகுய்யவந்த சோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து திருப்புறம்பியமுடைய மஹா தேவர்க்கு.........என்று தொடர்கிறது.

இது, தென்இந்திய கல்வெட்டுத் தொகுதியில் வெளி வந்துள்ளது, இதனால் இராசேந்திர சிங்கவளநாடு முதற் குலோத்துங்கன் காலத்தில் உலகுய்யவந்த சோழவளநாடு என்று பெயர் எய்தியது என்பதை அறியலாம்.

III

மன்னன்—விக்கிரம சோழன்

ஆண்டு—பதினொன்றாவது

இடம்—விமானத்தின் தென்புறம்

சுவஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு 11க வது விக்கிரம சோழவளநாட்டு இன்னம்பர்நாட்டு அண்டாட்டுக் கூற்றத்து மணலூர் கிழவன் அரையன் திருப்புறம்பியமுடையானான முடிகொண்டப் பல்ல வரையன் இந்நாட்டு திருப்புறம்பிய முடையார் கோயிலிலே முத்திறத்து அடியார் அமுது செய்தருள சட்டி + க்கு...... என்று தொடர்கிறது.

இதுகாறும் இக்கல்வெட்டு வெளிவரவில்லை. இதனால் முதற் குலோத்துங்கன் மகனாகிய விக்கிரமசோழன் காலத்தில் விக்கிரம சோழவளநாடு என்னும் பெயர் எய்தி இருந்தது புலனாகிறது.

IV

மன்னன்—இரண்டாம் இராச ராசன்

ஆண்டு—ஏழாவது

இடம்—அர்த்தமண்டபத்தின் தென்புறம்.

..................வீரசிம் மாசனத்து புவனி முழுதுடையா ளொடும் வீற்றிருந்தருளிய கோபரகேசரிபன்மரான திரி புவன சக்கரவர்த்திகள் ராஜ ராஜதேவற்கு யாண்டு ஏழாவது கன்னி நாயற்று அபரபட்சத்து நவமியும் புதன் கிழமையும் பெற்ற ஆயிலேய்த்தி நாள் விக்கிரம சோழவளநாட்டு இன்னம் பர் நாட்டு பழைய வானவன் மாதேவி சதுர்ப் பேதி மங்கலத்து நின்றும் வேறுபிரிந்த திருப்புறம்பியத்து....என்று தொடர்கிறது.

இக்கல் வெட்டின் நீண்ட மெய்க்கீர்த்தியை இலக்கண விளக்கப் பரம் பரை. திரு. சோமசுந்தர தேசிகர் அவர்கள் எடுத்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் திங்கள் இதழாகிய செந்தமிழில் வெளியிட்டுள்ளார்கள்.

V

மன்னன்—மூன்றாங் குலோத்துங்கன்

இடம்—மஹா மண்டபத்தின் தென்புறம்.

சுவஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கர வர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்ட குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு பதினெட்டாவது விக்கிரம சோழவளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவானம் திருப்புறம்பியத்து உடையார்..........என்று தொடர்கிறது.

மேற்குறித்த (IV, V ,) இவ்விரு கல்வெட்டுக்களாலும் விக்கிரம சோழன் காலத்திற்குப் பிற்பட்ட மன்னர்கள் காலத்திலும் விக்கிரமசோழவளநாடு இப்பெயரே வழங்கி வந்தமை புலனாகும்.

இனி,

சேக்கிழார் பெருமான் முதலாம் இராசேந்திரன் அல்லது கங்கை கொண்ட சோழன் காலத்தவர் என்று எழுதிப் போந்த ஆராய்ச்சியாளர்கள் "முதலாம் இராசேந்திரனுக்கு விக்கிரமச் சோழன் என்ற பட்டம் உண்டு அதனால் அவன் கீழுள்ள நாட்டிற்கு விக்கிரமச்சோழவளநாடு என்று பெயராயிற்று," என்றதோடு அமையாது யான் ஈண்டுக் குறித்துள்ள திருப் பேரம்பலம் பொன்வேய்ந்த—என்று தொடங்கும் கல் வெட்டை அதற்கு ஆதாரமாகவும் காட்டுகின்றார்கள்.

முதலாம் இராசேந்திரனுக்கு விக்கிரமசோழன் என்று பட்டம் இருப்பினும், விக்கிரமசோழவளநாடு என்று அவன் காலத்தில் நாட்டிற்குப் பெயரே இல்லை. திருப்புறம்பியம் சிவன்கோயிலில் முதலாம் இராசேந்திரனுக்கு இரண்டே கல்வெட்டுக்கள் தான் இருக்கின்றன. அவை அவனுடைய மூன்றாம் ஆண்டிலும், பதினாறும் ஆண்டிலும் பொறிக்கப் பெற்றவை அவற்றில், இராசேந்திர சிங்க வளநாடு என்ற பெயர்கள் தான் காணப்படுகின்றன.

இதற்குக் கல்வெட்டு ஆதாரங்கள்.

இடம்—விமானத்தின் மேல்புறம்

மன்னன்—முதலாம் இராசேந்திரன்

ஆண்டு—மூன்று.

(1) கோபரகேசரிபன்ம

(2) ரான ராஜேந்திர

(3) சோழதேவற்குயாண்

(4) டு ங ஆவது ராஜேந்திர

(5) ஸிம்ஹவளநாட்டு அண்

(6) டாட்டுக் கூற்றத்து நின்று நீங்

(7) கிய திருப்புறம்பிய தேவர்

(8) திருவுண்ணாழிகைச் சிவப்பிராமணர்க்கு......என்று தொடர்கிறது.

இடம்—விமானத்தின் வடபுறம்

மன்னன்—முதலாம் இராசேந்திரன்

ஆண்டு—பதினாறுவது

திருமன்னிவளர இருநிலமடந்தையும்....................காவல் கடுமுரட் கடாரமும் மாப்பெருந் தண்டாற்கொண்ட கோப்பரகேசரிபன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு ௰௬ வது வடகரை ராஜேந்திர சிங்கவளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதானம் திருப்புறம்பியத் தாதீத்தீஸ்வரமுடை மஹாதேவர்க்கு........என்று தொடர்கிறது.

ஆராய்ச்சியாளர்கள் மேற்கோளாகக் காட்டும் கல்வெட்டு மூன்றாங் குலோத்துங்கனுடையதாகும். அக் கல்வெட்டில் வந்துள்ள திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்ற பட்டம் முதற்குலோத்துங்கனுக்கு முந்திய அரசர்களுக்குக் கிடையாது. ஆகையால் ஆராய்ச்சியாளர்கொண்ட கொள்கை வலியுடைத்தாயில்லை.

முச்சங்க காலம்

வித்துவான் திரு மா. இராசமாணிக்கம் P. O. L.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 8, பக்கம் 300)

சிந்துப் பிரதேச திராவிடர்

(கி. மு 6000—கி. மு. 2750)

இந்திய ஆராய்ச்சி இலாகாவினர் 1922-ஆம் ஆண்டில் பஞ்சாப்பிலும், சிந்துவிலும் தோண்டி ஆராய்ச்சி செய்ததன் பயனாக மோஹெஞ்சோடாரோ, ஹரப்பா என்னும் இரண்டு இடங்களிலும் திராவிடர் நகரங்கள் இரண்டு அகப்பட்டன. அந்நகரங்களை நன்கு ஆராய்ச்சி செய்த இந்திய ஆராய்ச்சி இலாகாத் தலைவரான சர்ஜான் மார்ஷல் என்னும் துரைமகனார், "Never for a moment was it imagined that 5000 years ago, before the Aryans were heard of. The Punjab and Sindh, if not other parts of India as well, were enjoying an advanced and singularly uniform civilization of their own, closely akin to but in some respects *even superior to that of contemporary Mesopotomia and Egypt*, yet this is what the discoveries at Harappa and Mohenjo-daro have now placed *beyond question*. They exibit the Indus peoples of the third and fourth millenia B. C. in possession of a highly developed culture *in which no vestige of Indo-Aryan influenee is to be found*" எனத்தமது முகவுரையைத் தொடங்கி எழுதிச்செல்லல் காணத்தக்கது. அவ்வாராய்ச்சி நூலில் அப்பெரியார், "There is nothing that we know of in prehistoric Egypt or Mesopotomia or any-where else in western Asia to compare with the well-built baths and commodious houses of the citizens of Mohenjo-daro. In those countries much money and thought were lavished upon temples and pyramids, but *here for the people*" ………………… "We are justified in seeing in the Great Bath of Mohenjo-daro and in its roomy and serviceable houses, with their ubiquitous wells and bathrooms and elaborate system of drainage, evidence that the ordinary towns-people *enjoyed here a degree of comfort and luxury unexampled in other parts of the then civilized world.*"[1]

1. Vide 'Mohenjo-daro and the Indus civilization'—Int. p vi.

"இந்தத் திராவிட மக்களின் நாகரிக காலம் சுமார் கி. மு. 3250—கி. மு. 2650 எனக்கூறலாம். ஏனெனில், இவர்கள் ஆரியர்க்கு முற்பட்டவர் ஆதலால் என்க. ஆரியர் இந்தியா வந்தது கி. மு. 2700-க்கு முன் என எக்காரணங் கொண்டும் கூறுதல் இயலாது.[1] அவர்க்கு முற்பட்டது இத்திராவிடர் நாகரிகமாதலின் உத்தேசமாக இக்காலம் கூறப்பட்டது. ஆரியர் நாடோடிகளாக இந்தியாவிற் புகுந்தபோது சிந்துப் பிரதேச திராவிடர் உயர்ந்த நாகரிகத்தில் இருந்தனர்; பயிர்த் தொழிலும் வாணிபமும் செய்து வந்தனர்; கோதுமை, பார்லி முதலிய கூல வகைகளைப் பயிரிட்டு வந்தனர்; எருமை, எருது, பன்றி, நாய், ஆடு, யானை, ஒட்டகம் இவற்றை வளர்த்து வந்தனர்; பொன், வெள்ளி, செம்பு, இவற்றைப் பெருவாரி யாகப் பயன்படுத்தினர்; நூல்நூற்றல், நெசவுத் தொழில் இவற்றில் வல்லுநராக இருந்தனர்; வாள், வில், ஈட்டி, அம்பு, கோடரி, இரம்பம், க்ஷவரக்கத்தி முதலியன அவர் கையாண்ட ஆயுதங்கள். இத்திராவிட மக்கள் எழுதவும் கற்றிருந்தனர். இவர்தம் மதம் 'சைவம்' என அங்குக் காணக்கிடக்கும் கணக்கற்ற சிவலிங்கங்களால் தெளியலாம். 'சைவசமயமே உலகில் மிகப் பழைய—இன்றும் உயிரோளேள்ள மதம்' எனத்துணிந்துகூறலாம்."

"இச்சிந்துப் பிரதேச நாகரிக மக்கள் பேசிவந்தது திராவிட மொழியே. இதற்குரிய காரணங்கள் மூன்று. அவையாவன:—(1) ஆரியர் வருகைக்கு முன் இந்தியாவில் பேசப்பட்டது திராவிட மொழியே. (2) இச்சிந்துப் பிரதேசத்தை அடுத்த பலுசிஸ்தான 'ப்ராஹி' பாஷையில் திராவிடச் சொற்கள் மிகுதியாக இன்றும் காணப்படுகின்றன. (3) சுமேரியர் மொழிக்கும் இத்திராவிடர் மொழிக்கும் ஏறக்குறைய ஒற்றுமை காணப்படுகிறது. சுமேரியர் திராவிடரே என்பது ஆராய்ச்சியாளரது முடிந்த முடிபாகும்."[2]

"தூய திராவிடர் என இப்போது கூறத்தக்கவர் தென் இந்தியாவில் இருப்பவரே. ஆயின், அவரிடம் பழைய நாகரிகத்தைக் குறிக்கக் கூடிய கட்டடங்களோ, பிறவோ இல்லையே எனின், அங்ஙனம் இராததாலேயே அவர்தம் தொன்மையை 'இல்லை' எனக் கூறல் இயலாது. அந்நாடு உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பது, மேலும், அழியக்கூடிய பொருள்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் நெடுங்காலம் நிலைத்திருத்தல்

1. Ibid. Vol. ii, p. 414. 2. Ibid. Int.

இயலாது. அக்கட்டடங்களே அழிக்கத்தக்க பொருள்கள் அங்கு இயற்கையாகவே இருக்கின்றன. இப்போதுள்ள தென் இந்தியக் கோபுரங்கள் பல புதிய நாகரிகத்தைக் கொண்டு கட்டப்பட்டன ஆயினும், அவற்றின் அமைப்பில் மிகப்பழைய கால நாகரிக ஓவியச்சிறப்பை இன்னும் காணலாம். மற்ற நாடுகள் புதியதாக ஒன்றைச் செய்வதாயின், சிறிய அளவிலேயே அப்புதியதைப் பரீட்சிக்கும். ஆனால் தமிழரோ, பெரிய அளவிலேயே தொடங்கிப் பல நூற்றாண்டுகளாகத் தங்கள் சிற்பத்திறமையை இக்கோபுரங்கள் வாயிலாகவும் பிறவற்றின் வாயிலாகவும் விளக்கியுள்ளனர். திராவிடரது சிற்பத்திறமையை மிகப்பழைய நகரமாகிய காஞ்சிபுரத்தில் இடிந்தநிலையில் உள்ள பழைய கோயில் ஒன்றைக்கொண்டு கணித்தறியலாம். ஆனால், தென்னிந்தியாவில் உள்ள அளவு வேலைப்பாடமைந்த பெரிய கோயில்கள் வட இந்தியாவில் காணல் இயலாது. இப்போதுள்ள திராவிடர் சிற்பத்தின் காலம் வேதகாலத்துக்குப் பிற்பட்டதாயினும்—இச்சிற்பத்திறமை ஆரியர் நாகரிகத்துக்கு மிக முற்பட்டது என்பது முற்றும் உண்மை. இத்திறமை திடீரென வருவதன்று; பல நூற்றாண்டுகளாக வளர்ந்துவந்த நாகரீகச் சாறே ஆகும். இலக்கியத்திலும் திராவிடர் ஆரியர்க்கு முற்பட்டவரே ஆவர்.''[1]

"சுமேரியர் திராவிடரே யாவர். அவர்கள் எல்லா அம்சங்களிலும் தென் இந்தியத்திராவிடரையே ஒத்துள்ளனர். இன்று இந்தியாவில் திராவிடர் தோற்றம் காணக்கூடுகிறதே அன்றி ஆரியர் தோற்றம் காணக் கூடவில்லை. அது முன்பே இறந்தொழிந்தது. திராவிடர்க்குள் ஒரு பிரிவினர் சிந்துப் பிரதேசத்தை விட்டு மேற்கு நோக்கிச் செல்லுகையில் 'ஏலம்' முதலிய இடங்களில் தங்கள் கலையை விதைத்திருக்கலாம். திராவிட எழுத்துக்களே மெஸபொடோமியாவில் நாளடைவில் மாறுதல் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றால், உலகத்து மிகப் பழைய நாகரிகங்களில் திராவிடர் நாகரீகம் ஒன்றேன்பது முற்றும் உண்மையே.''[2]

இனி, சிந்துப் பிரதேச திராவிடரைப் பற்றி இதுகாலை ஆராய்ச்சி செய்துவருகின்ற ஹீராஸ் பாதிரியார் சென்ற அக்டோபர் மாதத்தில் புதுக்கோட்டை மஹாராஜா கல்லூரி

---

1. Ibid. Vol. ii. Architecture and buildings-Sir John Marshall
2. Vide Dt. Hall's 'History of the Near East' pp. 173—176

யிலும் சென்னைப் பல்கலைக் கழகப் பரீட்சை மண்டபத்திலும் மூன்று அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவற்றின் சுருக்கம் தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத் தகும்.

"மொஹெஞ்சொ—தாரோவில் காணப் பெற்ற எழுத்துக்கள் வலப்புறமிருந்து இடப் புறமாக எழுதப் பட்டவை. அவை சித்திர சங்கேதக் குறிகள். அவை தொல்லைத் தமிழ் எழுத்துக்களாகும். இச்சித்திர சங்கேத எழுத்துக்கள் தமிழ் நூல்களிற்றான் கூறப்பட்டுள்ளன. இவை பண்டைத் தமிழர் எழுதியவை. [இச்சொற்பொழிவின் தலைப்பே "வட இந்தியாவில் பண்டைத் திராவிடர் கலை இருந்தமைக்குரிய சான்றுகள்" (Evidences of early Dravidian culture in Northern India) என்றிருத்தல் காண்க.] சிந்துப் பிரதேச திராவிடரும் தென்னிந்தியத் திராவிடரும் ஒரே மொழியைப் பேசி வந்தனர்; ஒரே நாகரிகத்தைப் பெற்றிருந்தனர்; ஒரே கலையைப் பெற்றிருந்தனர். இம்முடிபு அங்குக் காணப்பெறும் சாசனங்கள் (எழுத்துக்கள்) அறிவிப்பதாகும்."[1]

"சிந்துப்பிரதேச மக்கள் ஒரு பொருளைக் குறிக்க ஓர் குறியை ஆண்டுவந்தனர். இது சித்திர சங்கேதக் குறியாகும். இக்குறிகள் சீனர், சுமேரியர், ஈஜிப்டியர் முதலிய தொல்லை நாகரிகமக்கள் கையாண்டனவே. அங்குள்ள சிலஎழுத்துக்களைச் சேர்த்துப்படித்தபோது 'தண்கதிர் எழலார்' எனமுடிந்தது. இதன்கருத்துப்பெரும்பான்மை ஒப்பிலாமணிப்புலவர் பாடலடியில்உள்ளதுகாணத்தக்கது. 'விகுதிகள்'-இவற்றைக்குறிக்கும் எழுத்துக்கள்காணப்படுகின்றன. உதாரணமாகமீனைக்குறிக்கும் சித்திரஎழுத்தைஅடுத்து விகுதிகுறிக்கும் கோணக்கோட்டைச் சேர்ப்பின் 'மீன் + அன்' (மீனன்) என வாசிக்க முடிகிறது. சித்திரக்குறியீட்டை அடுத்து இருபுறங்களிலும் இருகோடுகள் இடுதல், பன்மையைக் குறிப்பதாகும். இரண்டு பொருளைத் தரும் இரண்டு குறிகளை ஒன்றுபடுத்தினால் மூன்றும் பொருளையும் உணர்த்தும். இக்குறியீடுகளால் இச்சிந்துப் பிரதேச திராவிட மக்கள் எழுதக்கற்றிருந்தனர் என்பது நன்கு வெளியாகிறது."[2]

---

1 Vide his lecture at Pudukottah, 18-10-37' (The Hindu 19-10-'37)

2 Vide his Lecture (20—10—37)—The Hindu (21—10—37)

வையகமெங்கும் தெய்வத்தமிழ்

"இத்திராவிட மக்கள் இராசிமண்டலம் கண்டவர்கள். இவர்கள் காலத்தில் 8 இராசிகளே கண்டுபிடிக்கப்பட்டன. இவர்கள் கண்டறிந்த காலம் சுமார் கி. மு. 5610 எனக் கூறலாம். இக்காலத்துக்குப் பிற்பட்டதே சுமேரியர் நாகரிககாலம். அவர்கள் பன்னிரண்டு இராசிகளைக் கூறியுள்ளார்கள். மேலும், 'அன், அனில், அமா' என்னும் திராவிடர் தெய்வங்களில் முதல் தெய்வம் சரித்திரத்திற்கு முற்பட்ட தெய்வமாகச் சுமேரியரால் கருதப்பட்டது. அதன் மகனை 'அனில்' என்னும் தெய்வத்தை 'என்லில்' என்ற பெயருடன் சுமேரியர் முதன்மைபெற்ற கடவுளாக வணங்கிவந்தனர். இவற்றால், 'சுமேரியர் நாகரிகத்துக்கு முற்பட்டதே இத்திராவிடர் நாகரிகம்' என்பது நன்கு அறியத்தக்கது. முடிவாக, 'இந்திய (கீழ் நாட்டு) மக்கள் மேற்கு நோக்கிச் சென்று சுமேரியாவில் இருந்த அநாகரிக மக்கட்கு நாகரிகமும் எழுத்து முறையும் கற்பித்தனர் என்று பழைய பைபிள் கூறுதல் உண்மை எனவே தோற்றுகிறது. சுமேரியரைத் திருத்திய திராவிடரே பின் ஈஜிப்ட், ஸ்பெயின், இங்கிலாந்து, ஐயர்லண்ட் முதலிய இடங்களில் தங்கி தங்கள் நாகரிகத்தைப் பரப்பியவர் ஆதல் வேண்டும். என்னை? ஈழத்திலும் புதுக்கோட்டையிலும் பழனிமலைத் தொடரிலும் காணப்பெறும் கல்மேசைகள் அவ்விடங்களில் காணப்பெறுதலால் என்க."[1]

இங்கு, இவ்வீற்றுச் செய்தியோடு டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் தமிழ்மொழி ஒன்றைக்கொண்டே (வேறெத்தகைய சான்றுகளுமின்றி 1875-ல்) கட்டிய முடிபு நோக்கத்தக்கது: "How remarkable that distinct affinities to the speech of the Dravidians of inter-tropical India should be discoverable in the language of the Finns of Northern Europe, and of the Ostioks and other Ugrians of Siberia; and, consequently, that the *pre-Aryan inhabitants of the Dekkhan* should appear, from the evidence furnished *by their language alone*, in the silence of history, in the absence of all ordinary probabilities, *to be allied to the tribes that appear to have overspread Europe before the arrival of the Teutons and the Hellenes, and even*

1. Ibid. (21—10—37)—Madras Mail (22—10—37)

before the arrival of the celts. What a confirmation of the statement that 'God has made of *one* blood all nations of men, to dwell upon the face of the whole earth!''[1]

இதுகாறும் கூறியவற்றோடு பின் வருவனவும் நினைவிற் கோடல் அவசியம்: (1) ஆஸ்ட்ரேலிய சுதேசிகள் பாஷையில் தமிழ் மணம் வீசுகிறது. (2) சீனத்தில் 'நீ' முதலிய முன்னிலைச் சொற்களும் தமிழ் இலக்கண அமைதியும் காணப்படுகின்றன. (3) ஸைபீரிய மொழிகளில் (Scythian tongues) திராவிட மணம் பேரளவு வீசுகிறது. (4) ஐரோப்பாவில் தமிழ் அமைதி உண்டென்பதை மேலே கால்ட்வெல் பாதிரியாரே கூறிவிட்டனர். (5) ஆப்பிரிக்காவில் 'போர்நு' என்னும் தேசத்திய பாஷையில் தமிழ்ச் சொற்களான நீ, நீர், முதலியனவும் பிற அமைதிகளும் காணப்படுகின்றன.[2] (6) ஈஜிப்டில் 'வேள்' என்னும் தமிழ்ச்சொல் 'மண்பானை, சட்டி, குடம்' என்னும் பொருள்களைக் குறிக்க வழங்கப்படுகிறது.[3] நைல் நதிப் பிரதேசத்தில் சிவலிங்கம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது'[4] (8) தென் அமெரிக்காவை அடுத்த ஈஸ்டர் தீவுகளில் திராவிடச் சொற்கள் காணப்படுகின்றன.[5] (9) " 'பால்'' என்னும் பகுப்பே ஸிதியன் மொழிகளில் இல்லை. இண்டோ-யூரோப்பியன் மொழிகளில் வினைகளில் 'பால்' உணர்த்தல் இல்லை. செமிட்டிக் மொழிகளில் ஒருமையில் உண்டு; பன்மையில் இல்லை. ஆனால், திராவிட மொழிகளிலோ எனில், 'பால்' உணர்த்தும் பான்மை பெயரிலும் உண்டு, வினையிலும் உண்டு. இத்தனிப் பெருமை திராவிட மொழிகட்கே உண்டு. சம்ஸ்கிருதம் இத்துறையில் குறைந்த வளர்ச்சியுடைய தென்றே கூறுதல் வேண்டும். அது திராவிடமெழிகளிலிருந்து ஏதேனும் கடன் வாங்கியிருந்தால் இருக்கலாமே அன்றித் திராவிட மொழிகட்குக் கடன் தந்ததாக இராது.''[6] திராவிட மொழிகளில் மிகத் தொன்மை வாய்ந்தது தமிழே[7] (10) "வேதகால சம்ஸ்கிருதம் திராவிடமொழியோடு பெருங்கலப்புண்டது''[8]

---

1. Vide his 'Comparative Grammar'. Int. p. 68 (cd.3).
2. Int. p. 77.
3. Vide R. Raghava Iyengar's University Lectures in 1933.
4. Vide G. Oppert's 'Ancient Commerce of India'
5. Vide Kalaimagal, part 72, 'Ancient Tamil Letters.'
6. Vide Caldwell's 'Comparative Grammar' pp. 251, 252 (ed.3).
7. Ibid. Int. pp. 81—88.
8. Rhys Davids 'Buddhist India', p. 156.

"வேதகாலத்துப் பாஷையின் உச்சரிப்புத் திராவிட சொற்களால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. அப்பஷை, ஆரியர் முன்பு கண்டிராத பொருள்களின் பெயர்களைக் கடன் வாங்கிய தோடு அமையாது, எண்ணங்கள் சிலவற்றைப் பற்றிய சொற்களையும் கடன் வாங்கியது";[1] "தமிழ்ச் சொற்களாகிய 'முத்தம்', 'ஓடம்' என்பன வேதங்களிலேயே நுழைந்து விட்டன"[2] (11) தமிழுக்கென அமைந்த எழுத்துக்களே வேறு சில மாறுதல்களுடன் வடமொழியாக மாறியதெனத்தெரிகிறது.[3] (12) அசோகன் கல் வெட்டுகளில் காணப்படும் 'பிராமி' எழுத்துக்கள் பண்டைத் தமிழுக்கென அமைந்தவையே என்பது தெரிகிறது.[4]

தமிழகமும் சரித்திரமும்

இதுகாறும் கூறிய உண்மைகளால் தமிழ்மொழியின், தொன்மையும், சைவத்தின் தொன்மையும், நன்கறியலாம். ஆனால், சிந்துப் பிரதேச திராவிடர் வாழ்ந்த நாகரிக காலத்தில் தென் இந்தியத் தமிழர் அதே நாகரிக நிலையில் இருந்தனர் என்பதற்குச் சான்றுண்டோ? எனின், 'ஆம்' என அறைவோம்: (1) சிந்துப் பிரதேசத்தில் காணப்பெற்ற சித்திர சங்கேதக்குறிகள் ஹைதராபாத்தில் கண்டெடுக்கப் பட்ட மண்பாண்டங்கள்மீது காணப்படுகின்றன.[5] அக்குறி களையேகொண்ட நாணயங்கள் திருநெல்வேலியில் கண்டெடுக்கப் பட்டன.[6] இந்தியாவின் வடகோடி, நடுப்பாகமாகிய ஹைதரா பாத் தென்கோடியாகிய திருநெல்வேலி ஆகிய மூன்றுஇடங்களி லும் ஒரேவிதக் குறியீடுகள் காணப்படுகின்றன எனின், இந்தியா முழுவதும் ஒரே கலை—ஒரே நாகரிகம் இருந்தன எனத்துணிதலில் ஐயமுண்டோ? ஹீராஸ் பாதிரியாரும் இதனையே தமது

---

1. Vide. Sunithi Kumar Chatterje's 'Origin and Development of the Bengali Language'—pp. 40—45.
2. Vide. P. T. Srinivasa Iyengar's 'History of the Tamils' pp. 24—27.
3. Vide. P. N. Subramanian's 'Ancient Tamil Letters'—Kalaimagal, part 72.
4. Ibid.
5. Hydrabad Archealogical Society Journal, 1917.
6. Mysore " Survey Report, 1935.

சொற் பொழிவில் குறித்திருத்தலும் நோக்குக. இத்துடன் "மொஹெஞ்சொ—தாரோவும் ஹரப்பாவும் ஒன்றுக்கொன்று 400 மைல் தூரமிருப்பினும் இரண்டிடங்களிலும் ஒரேவகைப் பட்ட நாகரிகம் பரவியிருந்ததென்பது அவ்விடங்களில் கிடைத்த பொருள்களால் அறியலாம்" என்னும் சர்ஜான் மார்ஷல் கூற்று ஒப்பிடத்தக்கது.[1] 400 மைலுக்கப்பாற் பட்ட நாகரிகம் ஒன்றாக இருப்பது போலவே 4000 மைலுக் கப்பாற்பட்ட நாகரிகமும் ஒன்றாக இருந்ததென்பதில் வியப் பென்னை ?

இவற்றால், ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுவதும் தமிழே பரவியிருந்ததென்பதும், தமிழரே பழைய குடிமக்கள் என்பதும் நன்கு அறியப்பட்ட செய்திகளாம். அத்தொல்லை நாளில், தமிழகம் சுமேரியருடனும் ஈஜிப்டியருடனும் வாணிபம் செய்து வந்தது. சுமேரியர் துறைமுகப்பட்டினமான 'ஊர்' (Ur) என்பதை ஆராய்ச்சி செய்த **லியோனர்ட் உல்லி 'தேக்க மரத்துண்டு'** ஒன்றைக்கண்டு பிடித்தார்; "இம்மரத்துண்டு மலையாளக் கரையினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்டதாதல் வேண்டும். இதன்காலம் சுமார் கி. மு. 4000 ஆக இருக்கலாம். அப்பண்டைக் காலத்தில் உலகில் வேறெங்குமே தேக்கமரம் (மலையாளம் தவிர) பயிராக்கப்படவில்லை" எனக்கூறியுள்ளமை கவனிக்கத் தக்கது.[2]

சுமார் கி. மு. 2600-ல் இருந்த எகிப்து அரசனான **'மேர்னியர்'** (Mernere) என்பானது உத்தியோகஸ்தனான 'ஹார்க்கப்' (Harkhuf) என்பான் சாஸனம் ஒன்றில், "நான் 300 கழுதைகள் வாசனைப் பொருள்கள், தானியங்கள், தந்தம், எபொனி (மரவகை, சிறுத்தைப் புலிகள் முதலியவற்றோடு வந்து இறங்கினேன்" என்னும் செய்தி கண்டிருக்கிறது. 'வாசனைப் பொருள்கள்' இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கி. மு. 1500—ல் இந்தியாவி லிருந்து இதே பொருள்கள் ஈஜிப்டிற்கு அனுப்பப்பட்டன என் பதிலிருந்தும் உண்மை உணரலாம்.[3]

---

1. Vide his vol. i. p. 91.
2. Ragozin's 'Vedic India', p. 305.
3. Vide Warmington's 'Commerce between Rome and India', p. 273.

பாபிலோனியரது பழைய ஆடைப் பட்டியல் ஒன்றில் 'சிந்து' என்னும் சொல் ஆடைக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது.[1] இவ்வாடை பாரசிக வழியாகப் பாபிலோனுக்குச் சென்றிருக்குமாயின், 'சி' என்னும் எழுத்து 'ஹி' என (சிந்து-ஹிந்து என மாறினாற்போல) மாறி இருக்கும். அங்ஙனம் மாறாமையால், இவ்வாடை கடல் வழியாகவே போயிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. 'சிந்தி' என்னும் சொல் இன்றும் ஒருதுண்டு ஆடையைக் கன்னடத்தில் குறிப்பது காணத்தக்கது. துளுவத்திலும் இதே பொருளில் வழங்குகிறது. இவ்வாணிபம், வேதங்களை யாத்துக் கொண்டிருந்த ஆரியரால் நடத்தப்பட்டிராது; கடல்வாணிபத்தில் கைதேர்ந்த தமிழரால்றான் நடத்தப்பட்டிருத்தல் வேண்டும்.[2]

இவற்றால், பண்டைத் தமிழர் கி. மு. 4000 ஆண்டுகட்கு முன்னர் இருந்தே கடல் வாணிபத்திற் சிறந்திருந்தனர்என்பது நன்கு விளங்கும். இத்தகைய மக்கள் 'மொழி' பெற்றிருந்தனர் என்பதிலோ—எழுதக் கற்றிருந்தனர் என்பதிலோ ஐயமுண்டாக இடமில்லை என்பது இதுகாறும் கூறிய பல சான்றுகளால் விளங்கக் கிடத்தல் காண்க.

இனித் தமிழ் எழுத்துக்களைப் பற்றி அடுத்த இதழில் ஆராய்வோம் :

(தொடரும்)

1. Vide. Mr. Sayace 'Hibbert Lectures' pp. 136—138.
2. Vide. Ragozin's 'Vedic India', p. 307.

உ

வள்ளல் மலையமான் திருமுடிக் காரி

(ஒரு சிறு நாடகம்.)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

)முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 10, பக்கம் 394)

இயல்-ரு காட்சி-உ.

உறுப்பினர் :—மாணவர்பலர் ; மணிமுருகன் ; மணிவேலன் ; மணிநாகன் ; ஆசிரியர்-இறையனுர்.

இடம் :—கோவலூர்ப் புறநகரின் கல்விக்கூடம்

பொழுது :—காலைப்பொழுது

[ஆசிரியர்-இறையனுர், தமிழ் நாட்டுத் தலையாயவர்களால் நாட்டுக்குற்ற இழிவைக் கூறல்.]

மாணவர் யாவரும் :—

இறை வணக்கம்.

பூமகன் நெடுமால் போற்றும்-புனிற்றிளம் பிறையார் சென்னி
நாமகள் செல்வி பணிகொள்-நன்னுதல் தையல் பாகன்
சேவலும் மயிலும் பெற்ற-திருக்கைவேல் முருகன் தந்தை
மேவா வையங் காக்கும்-மெய்வெண்ணீற் றழகன் காப்பு

திருமகள் உறையும் பேரூர்-திகழுறு முகில்மேற் ருழும்
பெருவரை முள்ளூர் தன்னைப்-பேரெழில் அரணுப் பெற்று
கடிமலர் பெண்ணை சூழும்-கடிதிருக் கோவல் மேவும்
வடிவினன் கொடை வாழ்கையன்-வல்லெழு தோள்கள் வாழி.

[பாடியதும் இடத்தமர்தல்.]

மணிமுருகன் :- [தனித்து] மணிவேலன், நேற்றைய பாடங்களைப் படித்திருப்பான். கல்வி முதல்வர், நம்மைப் பாடங் கேட்கும் பொழுதும் கிட்டுகிறது.

மணிவேலன் :—என்னாலியன்றவரை நெட்டுருப்போட்டுள்ளேன் ; ஆனால் சிலவிடங்களில் தட்டுகின்றது.

மணிநாகன் :—அடாடா, பாடம்பாடமென்று, சுவடியைக் கட்டிகொண்டு ஏனழுகிறீர்கள் ? எங்கே நம் முதல்வரைக் காணோம் ; இன்று வரமாட்டாரோ ?

மணிமுருகன் :—அப்படியொன்றுமில்லை. முதல்வர், இங்கு விடியுமுன் வந்தார். பழைய மன்னரிடமிருந்து சிறிது முன், எவரோ ஒருவர் வந்தார் ; அவரோடு வெளியே சென்றார்.

மணிநாகன் :—ஓஹோ ! பழைய மன்னர் ஆள் : ஏன் வந்தான்?

மணிவேலன் :—அஃதெமக்குத் தெரியாது.

மணிநாகன் :—இஃதறியா மக்களா நீவிர் ? நல்ல பிள்ளைகள் ! நம் பழைய மன்னர்-மலையமான் திருமுடிக்காரி, மிகவும் நல்லவர் ; பேரறிஞர் ; பிறவிக்குணமாகக் கொடையைப் பெற்றவர். வினை, எவரை விலக்கிற்று? 'குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்' என்றவுரைக்கு இலக்காயினர். அவரை யெண்ணும்போது நெஞ்சு துடிக்கிறது ; ஈடு செய்யமுடியாத ஓரழிவு நமக்கு வந்தாற் போலுள்ளது.

மணிவேலன் :—அவ்வாறு, கருதலாமோ ? காரி ஊழ்வினையால் கலங்குகின்றார். உலகிற் பிறந்தார்க்கு இன்பமும் துன்பமும் இயல்புதானே. இப்போது நம்மையாளும் அதியமான் அஞ்சி, மற்ற வேந்தரைப் போலவா வுள்ளார் ? சிலவற்றுள், காரியைவிடச் சிறந்தவர் என்றன்றோ கூறுகின்றனர்.

மணிநாகன் :—எவர் கூறுகின்றனர் ? 'நானுசெப்புதி' என்று சொல்லு. இவ்வாறு, உன்னைத்தவிர இம்மொழியை வேறெவருங் கூறவில்லை.

மணிவேலன் :—நன்று, நன்று ! உன்னைப்போன்ற கிணற்றுத் தவளைகட்கு நாட்டுவளப்பம் எவ்வாறு தெரியும் ? அதியர் கோமானின் ஆட்சி மேம்பாடுணராத உன்னை என்னென்பது ?

மணிநாகன் :—ஏடா, என்ன வாய்த் துடுக்கு ? நீ முற்று முணர்ந்த முனிவர் பெருமானோ ? யாரடா அறியாதவன் ?

மணிமுருகன் :—போதும் போதும் ; நிறுத்துங்கள். ஆசிரியர் வருகின்றார்.

[ஆசிரியர் நுழைய, மாணவர்கள் தொழுதுநின்று பாடுதல்.]

பொன்னார்மேனி பொலிவெண்ணீறு
மின்னார்புனல்முடி மிளிர்நறுகொன்றை
கண்ணார்திருநுதல் கவின்பிறைத்திங்கள்
விண்ணோர்தொழுமடி விளக்குமூவுலகம்
நஞ்சமர்மிடறு நவின்றவர்க்கருளும்
செஞ்சுடர்முக்கண் செடிதுயரகற்றும்
கொல்லேறுடையான் குழன்மொழிக்கூறன்
தொல்சீர்பரவும் தூய்மைக்குரிய
செந்தமிழ்பயிலும் செல்வநன்னெறியேம்;
எந்தையும்யாயும் இறையும்பிறவுமாய்
வந்தெமக்காகி வாழ்தருமருந்தே!
பைந்துணர்மலரால் பணிந்துமைத்தொழுதேம்
போற்றியெம்பெரும புகழுமைநின்சீர்
போற்றிபோற்றி திருவடிபோற்றி!

இறையனார் :—(இடத்தமர்தல்) அமருங்கள் (யாவருமிருத்தல்) மணிமுருகா! நம் கல்வி - முதல்வன் - முதுகூத்தன், எனிங்கு காணேன்?

மணிமுருகன் :—பெரும, வணக்கம். சிறிது முன்னதாக படைஞர் ஒருவர் இங்கு வந்தார்; அவர், பழைய மன்னர் மலையமானின் மெய்க்காவலர் போற் காணப்பெற்றார். இங்கு வந்தவர், நம் முதல்வர்பால் ஏதோ மறைவாகக் கூறினார்; முதல்வர் உடனே என்னையழைத்து, "நீ நம்மாசிரியர் வந்ததும், 'ஐயரானை நோக்கி யான் ஓர் அலுவற் பொருட்டுப் பணிவுடன் சென்றுளேன்' எனமொழிக" என்று சொல்லி வெளியே சென்றனர்.

இறையனார் :—ஓ! அவ்வாறு! மணிமுருக, அமர்க [மற்றவனை நோக்கி] எடா, மணிநாகா! யான் ஈண்டு வந்துறும் போது, இங்கு எழுந்த பெரும்பேச்சு உங்களிடம் எவ்வாறு தோன்றிற்று? முதல்வனின்றேல் முதனூட் பயிற்சியைக் கருதாது வீணே இவ்வாறு பொழுதைக் கழித்தல் நன்றல்லவே.

மணிநாகன் :— அடிகாள்! எம்மைப் பொறுத்தருள்க. என்றுமில்லாது நம் முதல்வர், இன்று வெளிச்சென்றமைக் கேற்ப, 'யாண்டுள்ளார் நம் கல்வி முதல்வர்' என யான் கேட்டமையே இக்குழப்பத்தை விளைவித்தது.

இறையனார் :—இஃதென்னை! நீ கேட்டதற்காகவோ இவ்வாறு பெரும்பேச்சு?

மணிநாகன் :—எம் குரவ! என் சிறுமொழி கேட்டருள்க. முதல்வர் எங்கேயென யான் வினவியபோது, 'மலையமானின் ஊழியருடன் சென்றார்' என மணிமுருகன் கூறினன். மலையமான் என்றசொல் என் செவியிற் பட்டதும் யான் அவரைப் புகழ்ந்தேன். என்னை மறித்து அவரினும் அதியமான் சிறந்தவரென மணிவேலன் மொழிந்தான். அம்மொழியால் விளைந்த சொற்பெருக்கே இவ்வாறு தோன்றியது.

இறையனார் :—சிறுவரீர்! நுஞ்செயல் என்னைக் கவலுறச் செய்கின்றது. எக்குடிப்பிறந்த யாவரேயாயினும் உயரியபண்பு, அறிவு, பயிற்சி இவைபெறாது ஒரு வினையைத் தொட்டால், அஃது ஒருபோதும் ஈடேறாது; மற்றும், பயனில் வழக்கும் பிணக்கும்தோற்றி, நாட்டினது சீரையுஞ் செல்வத்தையுங் கெடுக்கும். இதனால், நும்நிலையுணர்க.

மண்ணியல் நாடும் மக்காள்! நீவிர் உலகியல் அறியாதவர்; ஆள்வினைபு நுட்பமுங் கொண்டாரியற்றிய நன்னூல்களைக் கசடறக் கற்கத்தகும் நெறியினீர்; தக்காரையடுத்தும் தலையாயவர்தம் பொன்மொழியைப் பேணியும் மாசிலாமதியால் ஆய்ந்து கண்ட உண்மைகள் பொதிந்த, ஆழ்ந்தகன்ற அறிவினோரமைத்த அறநூல்களைத் தெளிவுறக்கற்குங் கடமையும்பெற்றுளீர். ஆதலால், நீவிர் நல்லறிவுந் தூயவாழ்வும் பெறுகின்ற அந்நாளிற்றான், நல்லவர்-அல்லாதவரெனவும் மேலோர்-கீழோரெனவுங் கூறவுரிமை பெறுவீர். அன்றியும் நும்மொழிக்கும் கருத்துக்கும் செயலுக்கும், செல்வாக்கும் உயர்வும் தகுதியும் தோன்றும். அவ்வாறின்றி, பளிங்குபோன்ற களங்கமற்ற, தூய, சார்ந்ததன் வண்ணமாகும் உளம்பெற்றநீவிர், குன்றாவூக்கத்துடன் இம்மை மறுமைக்காகும் உறுதிப்பொருள்களை நன்கு நாடிக் கல்லாதுபோனால், மாணவர் என்ற பெயர் உங்கள்பால் நில்லாது.

மாணவர்களே! உயர் மரபு, வள்ளன்மை, தோள்வலிமை, புலவர்பாடும்புகழ், மூவேந்தரஞ்சும் படைவலி, செங்கோன்மை ஆய பலவும் அதியமானும் மலையமானும் ஒரேபடித்தாகப் பெற்றுள்ளனர். எனினும், ஊழ்வலி எவரைவிட்டது? தன்னலமே பேணி வஞ்சித்தொழுகு மதியிலார்தம் நயவுரையை, வாய்மையெனக்கொண்டுமயங்கி, மரைநூலாற் கட்டுண்ட வேழம்போற் சிக்குண்டு, இவ்விருமன்னரும் தம்முட் பகைத்து நிற்கின்றனர். தமிழ்த்தாய் தளர்ச்சிபெற, தமிழ் மக்கள் வாட்டமுற, தமிழ்க் கலையும் தண்தமிழ்நெறியும் தன்னியல்கெட்டுத் தலைதடுமாற,

ஐயகோ! அவர்கள் படரும் தீய செலவினைக்கண்டு என்னுளம் அனலிற்பட்ட மெழுகுபோலாகின்றது. எல்லாம்வல்லஇறைவன் நமது மொழியும், நாடும், நந்தம்இயற்கை வாழ்வும், பண்டுபோற் சிறந்தோங்க, இனி, என்று அருளுவனோ? எல்லாம் அவன்றன் திருச்செயல்போலும்!

என்னரிய பிள்ளைகளே! இனி நீவிர், நம்மறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றைப்பற்றி உரையாடுதலொழித்து, இவ்விளமைப்பருவத்தே கற்கவேண்டுவன யாவையுங் கசடறக்கற்று நற்றிறம் பெறுவீர்களாக. மக்காள்! காலையுணவுப் பொழுதுங் கடுகிற்று; நீவிரனைவிரும் இல்லஞ் சென்று வருக.

[மாணவர் அனைவரும் எழுந்து வணங்கி மொழிதல்]

வைகறைத் துயிலினீங்கி வகையுடன் கடனையாற்றி
மைவளர் நெடுங்கண்வாணி மலரடி தொழுதுபோற்றி
ஐயர்தம் முரையிற்காணும் ஐம்புல நுகர்வின்மேலாம்
உய்நெறி யுணர்ந்தேம்காலை யுணுக்கொண்டு வாரேமையா!

(யாவரும் செல்லுதல்.)

காட்சி முடிவு.

இயல்-ரு காட்சி-ரு.

உறுப்பினர் :—ஆசிரியர்-இறைபனுர் ; கல்வி முதல்வன் முதுகூத்தன் ; மலையனின் இருமக்கள்

இடம் :—திருக்கோவல் புறத்துற்ற ஒரு கல்விக்கூடம்

போழுது :—முற்பகல்

[மலையனின் இருமக்களோடுற்ற முதுகூத்தன், காரியினல் ஓரிவள்ளலிறந்ததையும் அதியமான் அழிவுறப்போவதையும் ஆசிரியர்-இறையனுர்பா லறிவித்தல்.]

இறையனுர் :—ஓம் முழுமுதற்பொருளே, முருகா, உயர் தனிச் செம்பொனின் ஒளியே! போற்றி, போற்றி! [கண்மூடி உளம்பற்றல்]

அறிவார் அழகார் அருளார் அடலார்
திருவார் மயிலார் திறனர் செயலார்
மருவார் குழலார் உளமார் உடையார்
முருகார் முடியார் மகனர் அருள்வார்

[கண் திறந்தபோது முன்நிற்பானைக் கூர்ந்து நோக்கி]

எடா, முதுகூத்த, நீ யாண்டுச் சென்றனை? மலர்முகம்பெற்ற இளநகையுற்ற இம்மழலைச் சிறுர்கள் யாவர்?

முதுகூத்தன்:—ஒருமையினின்று, இருவினை தவிர்ந்து, மூவ மூக்ககற்றி, நாற்பொருளுணர்ந்து, ஐம்புலனடக்கி, அறுவழக் காற்றல், எழுமையும் பிறங்க, எண்திசை போற்ற, ஒன்பான் சுவை பொருந்த, பதின்குற்றமின்றி எம்மைப் பயிற்றுவிக்கும் பண்ணவ! தங்கள் அடிமலர் அடியேனின் திருமுடிக்கு அணி யாகுக. வணக்கம். அண்ணலே! இன்று காலையில், வீரர்-செங்கைவேலன் என்ற என் உறவினர், மலையமாமன்னரின் மெய்க்காவலர், என்பால் சில செய்தியை, தனித்து அழைத்துச் சென்றுகூறினர். அஃதாவது, வீரமிக்கஅதியமான்பால் தோல்வி பெற்று, தனது திருக்கோவலூரையிழந்து, தன்மனைவி மக்களைத் தக்கார் காப்பிலிருத்தி, அவர்களை அரிதிற்பிரிந்து சேரநாடு சென்ற நம்காரியினது பின்வரலாருகும்.

பெரும! சேரமான் பெருஞ்சேரவிரும்பொறை, நம்மலையனை மிக்கஅன்புடன் வரவேற்று அளவளாவி மகிழ்ந்தனராம். பிறகு,

கோவலூரைக் கைப்பற்ற படையுதவி செய்வதாகவும் வாக்குறுதி தந்தனராம். அதற்காக, நத்திருமுடிக்காரி சேரமானின் வேண்டுகோட்கிணங்கி, ஒரு பெரும்படையுடன் சென்று, கொல்லி மலைத்தலைவன் - ஓரியைக்கொன்று, அந்நாட்டைச் சேரமானிடஞ் சேர்த்தனராம். அப்படையெடுப்பால் வெற்றிபெற்ற காரி, தம் படைஞரோடு ஓரியினது நகர்க்குட் சென்றபோது அவ்வூரார் அனைவரும் ஓரியின் பிரிவால் அழுதரற்றிய காட்சி ஆண்டுச் சென்றாரனைவரையும் மிகவும் வருத்தியதாம்.

இறையனார் :—(நெட்டுயிர்ப்புற்று) ஆ, இறைவ! ஓரியின் வாழ்வு இவ்வாறு முடிவது முறையாமோ? காரி, ஓரியைக்கொன்றார்; நன்று, நன்று! இஞ்ஞாலம் இனி நில்லாது; உண்மை. ஆம் உண்மையே........பொன்னுலகவேந்தும் பொறாமை பெறுமாறு இல்வாழ்வின் நல்லறங்கள் பலவும் ஓம்பி, இத்தமிழகத்தில் உயிர்ப்பணி பூண்ட வள்ளன்மைமிக்க செல்வங்களாய எம்அதியமானும் ஆதன் ஓரியும் மலையன்காரியும் ஒன்றுபட்டு இன்பநிலையடையாதவாறு, தன்னலமே தாங்கும் வன்னெஞ்சர்களால் தடுக்கப்பெற்று, ஐயகோ! நல்லறங்கள் நலியவும் தமிழ்மக்கள் தளரவும் ஆகின்றனவே. ஆ! கொல்லிநா டாண்டகோவே; வலிய விற்பயிற்சி பெற்ற ஓரி! இன்றுடன் நின் கொல்லிவரை கல்விச்செல்வரைக் கைவிட்டது. மாரியை நிகர்க்கும் நின் கை வண்மையை இனிப் புலவர்கள் யாண்டுக் காண்பர்? அந்தோ! இரப்பவர் நெஞ்சுள் இன்பவூற்றாயமைந்த அக்கொல்லிவரை, இன்று கொடுப்பாரற்ற கொல்வரையாய் நிற்கின்றதே!........ முதுகூத்த! மற்றைய கூறுக.

முதுகூத்தன் :—அருண்மிகு அடிகாள்! ஓரியைக் காரியால் ஒழித்து, நீண்ட நாட்களாகத்தான் அவாவிய கொல்லி நல்வரையைக் கைக்கொண்ட சேரமான், இன்று தன் வாய்மையைக் காக்கும் பொருட்டுத் தனது பெரும்படையால் அதியமானை எதிர்த்துப்போரில் வெல்லவும் திருக்கோவலூரை மறுபடியும் நம் மலையமான் பெற்று மகிழவும் வேண்டுவன யாவும் அமைத்துள்ளாராம்.

இறையனார் :—நீயும் ஒரு நற்செய்தியே கூறினாய்! எனினும், அதியமானுக்கு அழிவு நேராதவாறு, நம் மலையன் தன் அரசுரிமையைப்பெற்றால் இத்தமிழகம் பெரும்பேறுபெற்றதே. எவரறிவார் அவர்தம் திருக்கூத்தை? நன்று, முதல்வ, இம்மக்களைக்குறித்து இதுகாறும் நீ, யாதும் கழறினாயிலையே?

முதுகூத்தன் :—பொறுத்தருள்க, எம் மாசகற்று மதியோய்! இவ்விருவரும் நம் காரியின் அரும்பெறன் மக்களாவர்.

இறையனார் :—ஆ, அப்படியா? என்னினிய மக்காள்! ஈண்டு வருக: வருக நலமுடன்; வாழ்க வலம்பட! (தழுவிக்கொள்ளுதல்) முதுகூத்த! நின்பாலிவர்கள் எவ்வாறடைந்தனர்?

முதுகூத்தன் :—ஆசிலா ஐயனே! நங்காரியின் பகைஞர் இவர்களைக் கவர்ந்துசென்று, மலையன்பால் மனக்கசப்புற்ற புகார்ச் சோழன் கிள்ளிவளவனிடஞ் சேர்த்தனராம். அங்கு நிகழ்ந்தனவற்றை இம்மழலைமொழியார் இனிதே நவில்கின்றனர்.

இறையனார் :—மணிமொழி மக்காள்! அங்கு என்ன நிகழ்ந்தன? என்பாற் கூறுக.

முதன்மகன் :—ஐயனே! ஒருநாள் மாலையில் எங்கள் வீட்டருகே இருந்த சோலையில் என் தம்பியுடன் நான் விளையாடிக் கொண்டிருந்தேன். என் தம்பி அங்கு ஓடிய ஒருமானைக்கண்டு அதனிடம் ஓடினான்; நானும்சென்றேன். மான் எங்கேயோ மறைந்தது. ஆனால் ஒரு கறுத்த உயர்ந்த ஆள் தென்பட்டான். அவன் எங்களிடம் விரைந்துவந்து ஒரே பிடிக்குள் எங்களைத் தூக்கிக்கொண்டு ஓடினான். நாங்கள் அலறினோம். எவரும் அப்பக்கம் வரவில்லை. அவன் எங்களை ஓபவைத்து பணியாரமும் பழமும் கொடுத்தான்; எங்க ளப்பாவிடம் அழைத்துப் போவதாகக் கூறினான். பிறகு நாங்கள் உறங்கினோம்.

விடிந்து எழுந்தபோது நாங்கள் ஒரு மன்னர்முன் இருந்தோம். அவர்கள் என்னையும் தம்பியையும் ஒரு புல் நிறைந்த வெளியில் நிறுத்தினார்கள். என் தம்பி என்னைக்கட்டிக்கொண்டு ஐயோ, அப்பா, அம்மா! எனத்தேம்பியழுதான். எங்களைச் சுற்றிலும் பலர் நின்றுகொண்டிருந்தனர். எங்களை நோக்கி, ஒரு யானை துதிக்கையை உயர்த்திப் பிளிறிக்கொண்டு வந்தது. என் தம்பியிடம், 'தம்பி! அழாதே, அதோபார், யானை வருகிறது. அப்பா வருவார்' என்று நான் கூறிக்கொண்டிருந்தபோது, ஒரு நரைத்த கிழவர் எங்கிருந்தோ மன்னனிடம் ஓடிவந்தார்; எங்களைச் சுட்டி ஏதோ கூறினார். உடனே ஒருவன் எங்களை அழைத்துச்சென்று உணவு முதலியன தந்தான். பிறகு எங்கள் தந்தையிடம் வந்தோம். அங்குநின்றும் புறப்பட்டு இப்போது எம் அன்னையிடஞ் செல்கிறோம்.

இறையனார் :—என் கண்மணிகாள்! திக்கிலாதிருந்த உங்கட்குத் தெய்வமன்றோ துணை நின்றது. யாவும் அவன் செயல் போலும்.

முதுகூத்தன் :—பெரும! இச்சிறுவர்களைப் புகார்ச்சோழன் இரக்கமின்றி இடர்ப்படுத்த நினைந்தமையைச் செங்கைவேலர் கூறுங்கால் என்னுடல் விதிர்விதிர்த்தது; எவர்செய்த நல்வினைப் பேறோ இவர்கட்கு உயிர்ப்பிச்சை யளித்தது. ஐயனே! அக்கிள்ளிவளவன், இவ்விளைஞரிருவரையும் யானைக்காலில் இடுமாறு பணித்திட, அதற்காவன யாவும் முடிவு பெற்றதாம். அந்நிலையில் நந்தமிழகத் தனிப்பெரும் புலவரும், உண்மையைப் புரக்க உலையா முயற்சி கொள்பவரும் அருண்மொழிப் பாவலருமாய கோவூர்கிழார், எவ்வாறோ வளவனின் கொடுஞ்செயலினை யுணர்ந்து காற்றினுங் கடிதாக வளவனை யணுகி, "வெல்போர் வேந்தே! எட்டுத்திசையினும் எரிகொள்ளி உதிர்தல், மரம் இலையற்றுவாடல், ஞாயிறு பல்லிடத்துந் தோன்றல், ஆடை களைதல், அச்சந்தரு பறவை அலறுதல், எயிறு நிலத்துவீழல், எண்ணெயாடல், பன்றிமீதேறல், படைக்கலக் கட்டில்கவிழ்தல் ஆகியவற்றைக் கனவினும் மெய்ம்மையினுங் கண்டுங் கலங்காது பகைக்களஞ்சென்று வாகைசூடும் வலியையுடையோய்! நீ தான், ஒரு சிறு புறாவின் துன்பமன்றிப் பிற உயிர்கட்கும் உற்ற துன்பத்தையும் துடைத்த சோழன் சிபியினது மரபிலுள்ளாய். இச்சிறுவரோ, அறிவாலுழுதுண்ணுங் கற்றோரது வறுமைக்குவருந்தி அதனைப்போக்க, தமது செல்வங்களைப் பகுத்துக் கொடுத்துண்ணுப் தண்ணருள்பூண்டாரது வழியில் வந்தவர். இவர்கள் இப்போது யானையைக் கண்டு, தாம் இயல்பாக அஞ்சியழுதமையு மறந்து நிற்கும் பச்சிளங் குழவிகளாயுளர். அன்றியும் நின் மன்றத்தினை அச்சத்துடன் நோக்கி, முன்பறியாத ஒரு புதிய வருத்தத்தைப் பெற்றுள்ளனர். நான் கூறியனவற்றை நீ உள்ளவாறு கேட்டாயாயின், இனி நீ விரும்பியதைச் செய்வாயாக" எனக் கல்லு மரனுங் கரைந் துருகக் கூறவே, கிள்ளிவளவன் கோவூர் கிழாரது அருளுரையைச் செவிமடுத்து, தன் செயலுக்கு நாணி இவர்களை உடனே விடுவிக்கப் பணித்தனனாம்.

இறையனார் :—என்னருமருந்தன்ன மக்காள்! எத்தீங்குமினி நம்பாலெய்தாது. முருகனது பேரருளை என்றும் நீவிர் பெற்றவராவீர். ஞாயிற்றின்முன் வீழும் பனித்துளிபோல நும் துயர்கள் யாவும் மாய்ந்தன. வாழ்க எம் சிறுவீர்! வாழ்க,

வாழ்க!! முதுகூத்த! இவர்களை அன்புடனே அழைத்துச் சென்று உரியவர்பால் விடுத்து மீள்க. கடிதிற் சென்று வருக.

முதுகூத்தன் :—அண்ணலே! விடைபெறுகின்றேன். விரைவிற்சென்று மீள்வன். (வணங்கி, நீங்குதல்.)

காட்சி முடிவு.

தமிழ்ச் செய்திகள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவியவர் நாள் :— இச்சங்கத்தினை நிறுவிய பெரியார் காலஞ்சென்ற திருவாளர் **வே. இராதாகிருட்டின பிள்ளை** அவர்களின் நாள் (**7—3—39**) மாலை $3\frac{1}{2}$-மணிக்கு அவர் தம் குறிக்கோளாகக் கொண்டு நடத்திய திருவள்ளுவர் திருநாளுடன் கொண்டாடப்பெற்றது. அது பொழுது கல்லூரிப் புலவர், வித்வான். திரு. வெள்ளைவாரணனார் அவர்களும் இச்சங்கக் கல்லூரித் தலைமையாசிரியர், திரு. சிவ. குப்புசாமிபிள்ளை அவர்களும் முறையே "திருவள்ளுவர் வாழ்க்கை நோக்கம்" "சங்கம் நிறுவிய பெரியாரின் குறிக்கோள்" என்பனபற்றிப் பேசிப் போற்றினார்கள்.

நமது கலுழ்ச்சி :— சென்னைமாநிலச் சித்தர் மருத்துவக்கழக அமைச்சராயிருந்து தமிழர் மருத்துவ முறையினை நாட்டிற் குணர்த்தியவரும், அம்முறைகொண்டு தம்முடலை ஏறக்குறைய நூறாண்டளவு இந்நாட்டில் நிலை நிறுத்தித் தமிழ்மொழிக்கு அளப்பிலாத் தொண்டுசெய்த பேரறிஞரும் தமிழர் கடவுள் வழிபாட்டி லீடுபட்டுழைத்த பெரியாரும் ஆகிய உயர்திரு **விருதைச் சிவஞான யோகியார்** (**28—2—39**) பிற்பகல் இறையடிநீழல் எய்தியது குறித்துப் பெரிதும் வருந்துகின்றோம். அன்னார் உயிர் மீண்டும் இந்நாட்டிற் றோன்றித் தமிழ்மொழிக்குத் தொண்டுபுரிவதாக.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பர்கள் உதவிய நன்கொடை

(வெகுதானிய—மாசி)

திரு. நல்லப்பெருமாள் பிள்ளை	அவர்கள்	5	0	0
,, Dr. L. சொக்கலிங்கம் பிள்ளை கரந்தை	,,	5	0	0
,, P. A. ஆறுமுகம் பிள்ளை	,,	5	0	0
,, இராமாநுசம் பிள்ளை கரந்தை (திருமணம்)	,,	1	0	0
,, T. A. பாலகிருட்டின பிள்ளை கரந்தை	,, B.A.	5	0	0
,, நே. அ. வர்த்தமான முதலியார் கரந்தை	,,	50	0	0
,, T. A. வாசுதேவ பிள்ளை கரந்தை	,, B.A.	9	12	0
,, S. குமரசாமி மேற்கொண்டார் கூனம்பட்டி	,,	0	1	3
,, A. வீரையா வாண்டையார் பூண்டி	,,	0	12	0
,, K. சிவப்பிரகாசம் உரத்தநாடு	,,	2	0	0
,, K. விசுவநாத பிள்ளை தஞ்சை	,,	2	6	3
,, துரைசாமி பிள்ளை தஞ்சை	,,	2	6	3
,, A. கோபால்சாமி நாடார் வடகால்	,,	3	2	0

மருத்துவசாலைக்குதவிய அன்பர்

திரு. க. தியாகராசபிள்ளையவர்கள் பம்பாய்	B.A.	100	0	0